அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

Page. No. 157.

ACC. No. 18586

மலர் : 8
இதழ் 4
விலை அ 4

துன்முகி௵ ஆடி௴
ஜூலை-ஆகஸ்ட் — 1956

வருட
சந்தா
ரூ. 2-4-0



நம்பன் கோயிலில் நீரால் விளக்கேற்றிய
நமிநந்தியடிகள்
(பெரியபுராணச் சித்திர விளக்கம் 28; பக்கம் 172)

பொருளடக்கம்

158

பக்கம்

1. நேரான வாழ்வு (திருப்புகழ் மணி) ... 145
2. ஆடும் பரி (அநுபூதி விளக்கம்)
(கி. வா. ஜகந்நாதன்) ... 147
3. பிறவி (அ. ராமமூர்த்தி) ... 153
4. பிடி (C. V. சுப்ரமணியம்) ... 156
5. அரிதா? எளிதா? (மூ. பொன்னையா பிள்ளை) ... 159
6. பலவேசர் (முருகனடியார்) 'ரசபதி' ... 165
7. நரிநந்தியடிகள் (கி. வா. ஜ.) ... 172
8. இருமை வகை (இளவழகனார் விரிவுரை) ... 176
9. அருணகிரியும் ஐம்பூதத் தலங்களும்
(திருப்புகழ் சதுரர் சே. த. இராமலிங்கம் பிள்ளை B.A.B.T.,) 181
10. மெய்யுணர்வு (அ. ராமமூர்த்தி) ... 185
11. Tripod of Realisation (Thiruppugal Mani) ... 190

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரை மீ" முதல் பங்குனி மீ" முடிய வருடச் சந்தா உள்நாட்டிற்கு ரூ. 2—4—0 முன்னதாக அனுப்பவும். வி. பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருடச் சந்தா வி. பி. தபால் செலவு உள்பட ரூ. 9—0—0.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா இருபது ஷில்லிங்குகள் போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினால் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சந்தாச் செலுத்தினால், சித்திரைமீ" முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடியதை உத்தேசித்து சந்தா தொகையை பெற்றுக்கொள்ளவோ, மறுக்கவோ நேரும்.

அமிர்தவசனி, 54, பந்தர் தெரு, சென்னை.

அமிர்தவசனி
தெய்வீக மாதப்பத்திரிகை.

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே

மலர் 8	துன்முகி ஞூ ஆடி மீ ஜுலை—ஆகஸ்ட் -1956	இதழ் 4

நேரான வாழ்வு

(திருப்புகழ் மணி)

நேரான வாழ்வின் லக்ஷணங்களை நமது பெரியோர்கள் வெகு அழகாக வகுத்திருக்கின்றார்கள். பட்டினத்தார் உபதேசித்தார். "உண்டென்றிரு தெய்வம்" என்று. தெய்வ உணர்ச்சியற்ற வாழ்வு நரகம். நன்மக்கள் வாழ்வு, ஈசன் தவழுமிடமாகும், ஆகையால் தெய்வ நம்பிக்கை நேரான வாழ்வுக்கு இன்றியமையாதது. இது முதல் லக்ஷணமாகும். இரண்டாவதாக அந்தத் தெய்வத்தின்மேல், அன்பு எழுதல் வேண்டும். இதைப் பக்தி என்பார்கள். தாயுமானவர் சொல்லுவார். 'இரும்பு நேர் கள்வன் ஆனாலுமோ உனை இடைவிட்டு நின்றதுண்டோ' என்றார். தெய்வம் காந்தம்; மனிதன் அது இழுக்கப்

தாய்போல் உயிர்கள்தமைத் தாங்கும் தனிப்புலியூர்
கோயில் இருந்தகுணக் குன்றே அருளாயோ

பட்ட ஊசி. இந்த உறவைப் பெறுவது நேரான வாழ்வுக்கு இன்றியமையாத இரண்டாவது பண்பு. பிறகு மூன்ருவதாக வேண்டுவது ஒன்று உண்டு. அது அருணகிரியார் திருப்புகழில் குறித்திருக்கின்ருர். "நீவேறெனுதிருக்க நான் வேறெனுதிருக்க, நேராக வாழ்வதற்கு அருள்கூர!" என்ருர். பகவானிடத்தில் பக்தி செய்வதில், வேறு வேறு என்ற பாவத்தை யொழித்திடல் வேண்டும். பக்தனும் பகவானும் இரண்டறக் கலத்தலே வீடு என்பரால், நீயும் நானும் ஒன்றே என்ற பாவம் தெளிதல் வேண்டும்.

"ஊனுக்குள் நீ நின்று உலவியதைக் காணுமல் நானென்றிருந்து நலமழிந்தேன் பூரணமே" என்ருர் பட்டினத்தார். உடலும் உயிரும்போல் நின்ற நிலையில் பக்தன் நிற்க வேண்டுமாம். உயிருக்குயிராய் நிற்கும் நிலை வேற்றுமை யாகாததால் ஒற்றுமையை நாடியே வாழ்வதுதான் நேரான வாழ்வாகும்.

தாயுமானுர் தான் வேறல்ல தெய்வம் வேறல்ல என்பதற்கு ஒரு காரணம் செப்புகின்ருர்.

"சந்ததமும் எனது செயல் நினது செயல், யானெனும் தன்மை நினையன்றி யில்லாத் தன்மையால் வேறலேன்" என்ருர். வேற்றுமை ஒழிப்பதற்கு ஒரு வழியும் உண்டாம்.

"யாதொன்று நினைக்கின் யானது வாதலால், உனை நானென்று நினைக்கின் அத்துவித மார்க்கம் கைகூடும்" என்ருர்.

வாள்கருங்கண் மாதர் மயலகன்ற மாதவர்வாழ்
வேள்களத்தாய் என்முன் விரும்பி வருவாயோ

உலகெலாம் பரந்த ஏகமாய் இறைவன் நிற்பதால், உண்டென்று நம்பி இரண்டற நின்று பக்தி செய்து தெய்வீக இயல்பைப் பெற்று தெய்வம்போல் விளங்குவதே நேரான வாழ்வின் குறியாகும். நேரான வாழ்வே மனிதரை ஜீவன் முக்தர்களாக ஆக்கிவிடும்.

"ஹம்ஸஸ்ஸோகம் ஹம்ஸஸ்ஸோகம்
ஹம்ஸஸ்ஸோகம் ஹம்ஸோகம்
பரமாத்மாஹம் பரிபூர்ணோகம்
ஆனந்தோகம் ப்ரம்மைவாகம்"

அநுபூதி விளக்கம்

ஆடும் பரி — 10

(கி. வா. ஜகந்நாதன்)

(114-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

கந்தர் அநுபூதி யென்பது ஒரு பெரிய சொற் கோயில். கற்கோயில்களில் இறைவனுடைய திருவுருவம் இருக்கும் கர்ப்பக் கிருகம் நடு விடம். அதைச் சுற்றிப் பரிவாரதேவதைகளின் திருக் கோயில்கள் இருக்கும். மக்கள் வந்து வழிபடும் மண்டபங்கள் இருக்கும். பலவகைச் சிற்பங்கள் பொறித்த தூண்கள் இருக்கும். கடவுள் பிம்பங்களோடு மக்களின் பலவகைக் கோலத்தையும் சித்திரித்த உருவங்களை அந்தத் தூண்களிலே பார்க்கலாம். காமவிளையாடல்களின் காட்சிகள் கூடப் பொறித்திருப்பார்கள். பிரபஞ்சமே கோயிலாக உருக் கொண்டதோ என்னும்படி அங்குள்ள சிற்பங்கள் இருக்கும். அவற்றினூடே சென்று நடுவே வீற்றிருக்கும் இறைவனை வழிபட வேண்டும்.

நல்வாயில் ஐந்தெழுத்தை நானழிந்து போற்றுவதை
நெல்வாயில் நின்றுயே நீயறிந்து கொண்டிலேயோ

மதுரைத் திருக் கோயிலில் சென்று பாருங்கள். குரங்காட்டியின் சிற்பம் ஒரு பால் இருக்கும். குறத்தியின் உருவம் ஒருபால் இருக்கும். காமனும் ரதியும் எதிரெதிரே நிற்பார்கள். முனிவர்கள் ஒரு பெண்ணணங்கைக் கண்டு காமுற்றுத் தவம் குலைந்த நிலையில் இருப்பார்கள். கற்பகமும் காமதேனுவும் காட்சியளிக்கும். விநாயகர், முருகன், அம்மை, திருமால் ஆகிய தேவர்களும் அங்கங்கே பலபல கோலத்தில் சிற்ப உருவில் எழுந்தருளி யிருப்பார்கள். பெரிய கோயிலுக்கு ஏற்றபடி விரிவான வடிவங்களைப் பார்க்கலாம்.

கந்தர் அநுபூதி யென்னும் சொற்கோயிலும் மிக விரிவானதுதான். இதில் ஐம்பத்தொரு பகுதிகள் இருக்கின்றன. பெரும்பாலான இடங்களில் முருகனுடைய திருக்கோலங்களைக் காணலாம். சில இடங்கள் மனிதனுடைய மருள் விளையாட்டை நினைப் பூட்டும். பரிவார தெய்வங்களும் உண்டு. இனி அந்தத் திருக் கோயிலுக்குள் செல்லலாம். அருணகிரிநாதர் வழி காட்ட நாம் மெல்லச் சென்று இன்புறலாம்.

★

இதோ கோயிலுக்குள் புகுந்து விட்டோம். இறைவன் திருச் சந்நிதானத்தின் எதிரிலே நம் கண்ணுக்குத் தெரிகிறது மயில் வாகனம். எல்லாக் கோயில்களிலும் முதலில் நாம் பார்ப்பது வாகனந்தான். சிவபெருமான் திருக் கோயிலில் முதலில் நந்தியைத் தரிசித்துக் கொண்டே உள்ளே செல்ல வேண்டும். திருக் கைலாயத்திலும் திருவாசலில் காவல் பூணும் அதிகார நந்தியை வணங்கிய பிறகே உள்ளே போக இயலுமாம்.

இங்கே முருகன் திருக்கோயிலில் அவனுடைய வாகனமாகிய மயில், ஆடும் பரி, இருக்கிறது. அதை முதலில் அருணகிரிப் பெருமான் காட்டுகிறார். "இதோ பார், ஆடும் பரி; இதைக் கும்பிடு" என்கிறார். பிறகு அதன் அருகிலே நட்டிருக்கிற வேலைக் காட்டி, "இதையும் வணங்கு"

செழிப்பாய் வளரருளைச் சேர்ந்தார்க் கருளக்
கழிப்பாலை நின்றயென் கண்களிக்க வாராயோ

என்கிறார். முருகப் பெருமான் திருக் கோயில்களில் துவஜ ஸ்தம்பத்துக்கு அருகே மயிலும் வேலும் இருக்கும். அந்த இரண்டையும் கண்டு களித்தவுடன் சற்றே மேலே பார்க்கச் சொல்கிறார். "அதோ பார், ஆண்டவனுடைய வெற்றிக் கொடியாகிய சேவல்" என்று காட்டுகிறார். ஆடும் பரியையும் வேலையும் கோயிலுக்கு அழகு செய்கின்ற சேவலையும் தரிசித்து நிற்கிறோம். அவற்றைப் பார்த்து விட்டு அவசர அவசரமாக உள்ளே போகக் கூடாது. முருகனுடைய வாகனமாகிய மயில் எத்தனையோ உண்மைகளை விளக்கிக் கொண்டு நிற்கிறது. அவன் வேலோ ஞானத்தின் உருவம். அவனுடைய வெற்றிக் கொடியும் அரிய உண்மையைப் புலப்படுத்துவது. இந்த மூன்றையும் அமைதியாக வழிபட்டு அவற்றின் புகழைப் பாட வேண்டும். இறைவன் திருக் கோயிலுக்குள்ளே புகாமலே இந்த மூன்றையும் பாடிக்கொண்டு வாழ்வையே கழித்துவிடலாம். காட்டு மயிலையும் வேடன் வேலையும் குப்பைக் கோழியையுமா பாடப்போகிறோம்? முருகன் ஏறும் மயிலைப் பாடவேண்டுமானால் முருகனைப் பாடாமல் இருக்க முடியுமா? அந்த மயிலுக்குப் பெருமை வந்ததே முருகனால் தானே? அப்படியே வேலைப் பாடினால் அதைப் பிடித்த முருகனையும் பாடத்தான் வேண்டும். சேவலின் புகழும் முருகன் புகழோடு இணைந்ததே. ஆகையால் மயிலையும் வேலையும் சேவலையும் பாடிக் கொண்டே இருப்பது என்றால், அந்த மூன்றனோடும் சேர்த்து முருகனைப் பாடுவதாகவே முடியும். அருணகிரி நாதர் இந்த உண்மையை அறிந்தவர். முருகனை வேண்டுகிறவரைப் போல, நமக்கு வழி காட்டுகிறார். "முருகா, உன்னுடைய ஆடும் பரியையும், வேலையும், அணிசேவலையும் பாடும் வேலையையே என் வாழ்க்கைப் பணியாகத் திருவருள் புரிவாயாக" என்று வேண்டுகிறார்.

ஆடும் பரிவேல் அணிசே வலெனப்
பாடும் பணியே பணியாய் அருள்வாய்.

★

அல்லூர் களத்தால் அருள்காட்டும் அத்தா நின்
நல்லூர்ப் பெருமணத்தில் நான்கலப்ப தென்றேயோ

கந்தர் அநுபூதி மிகச்சிறிய பாட்டாகிய கலி விருத்தங்களால் ஆனது. உருவில் சிறியதானாலும் பொருட் செறிவு மிகவுடையது. இந்தநூல் மந்திர சாஸ்திரத்தைப் போலத் திட்டமும் நுட்பமும் உடையது. தன்னை ஓதுவாருக்கு வேண்டிய பொருளை அளிப்பது. பலர் இதைப் பாராயணம் செய்து தாம் விரும்பிய பயன்களைப் பெற்றிருக்கிறார்கள். ஒவ்வொரு பாடலையும் பாராயணம் செய்வதால் ஒவ்வொரு பயன் உண்டென்று பெரியோர்கள் சொல்வதுண்டு. சௌந்தர்ய லஹரியில் உள்ள ஒவ்வொரு சுலோகத்துக்கும் ஒவ்வொரு சக்கரமும் பூசை செய்யும் முறையும் உண்டு. அவ்வாறே அநுபூதிப் பாடல் ஒவ்வொன்றுக்கும் உண்டென்று சிலர் கூறுவார். இவை அநுபூதியின் சிறப்பைப் புலப்படுத்தும் செயல்கள்.

இந்த நூல் மந்திரம் போல விளங்குவது. மந்திரங்கள் யாவும் பிரணவத்தை முதலாக உடையவை. வேதமே ஓம் என்ற தொடக்கத்தை உடையது. திருஞானசம்பந்தப் பெருமான் எழுதும் மறையாகிய தேவாரத்தை அருளிச் செய்தார். அவர் வாக்கில் எழுந்த முதற் பதிகத்தின் தொடக்கத்தில் பிரணவம் அமைந்திருக்கிறது. தமிழ்மறையாதலால் அதைச் சற்றே மறைத்துக் கூறினர். பிரணவத்தின் அட்சரமான ஓகாரத்தைத் தகர மெய்யோடு சார்த்தி, தோ என்று எடுத்தார். "தோடுடைய செவியன்" என்று தொடங்குகிறது அந்தத் திருப்பாட்டு.

"எல்லையிலா மறைமுதல்மெய்
யுடனெடுத்த எழுதுமறை"

என்று சேக்கிழார் சொல்கிறார். "எல்லையற்ற மறையில் முதலாக உள்ள பிரணவ ஒலியைத் தமிழில் ஒரு மெய்யோடு சார்த்தித் தொடங்கிய எழுதும் வேதமாகிய தேவாரம்" என்பது அதன் பொருள்.

பிரணவத்தைத் தமிழில் எடுத்தாளும்போது மறைத்து, நுனித்துணர்வாருக்குப் புலப்படும்படி அமைக்க

சயேந்திரர்தம் உள்ளம் தகுவதெனச் சார்ந்த
மயேந்திர மாமணிநின் மாண்புரைத்தல் ஆவதுவோ

வேண்டும் என்ற நியதியைத் திருஞான சம்பந்தர் காட்டினார். அப்பெருமானை முருகப்பெருமானது திருவவதாரமாகப் போற்றும் அன்புடைய அருணகிரிநாதர் கந்தர் அநுபூதியின் ஆரம்பத்தில் பிரணவத்தை வைக்க எண்ணியவர் சம்பந்தரை அடியொற்றி அதனை நுட்பமாகக் காணும்படி வைத்தார். ஆனால் அவர் செய்தவாறு செய்யாமல் வேறு வகையில் செய்தார்.

ஓம் என்ற பிரணவம் மூன்று ஒலிகள் கூடிய எழுத்து. அகார உகார மகாரங்கள் மூன்றும் இணைந்து ஓங்கார ஒலி எழும். அருணகிரியார் ஓங்காரத்தின் உறுப்புக்களாகிய அந்த மூன்றையும் தனித்தனியே எடுத்து ஆண்டார்; மூன்று வகையில் ஆண்டார். அகரத்தின் விகாரமே ஆகாரம்; அகரம் குறில்; அந்த ஓசை பின்னும் ஒரு மாத்திரை நீண்டால் ஆ என்ற நெடிலாகும். ஆகாரம் இரண்டு அகரத்துக்குச் சமானமானது. அகரத்தைப் பின்னும் ஓர் அகாரம் கூட்டி ஆ என்று அமைத்தார். அடுத்த ஒலி உகரம். அதை ஒரு மெய்யுடன் சேர்த்தார். ட் என்ற மெய்யை வைத்து அந்தப் பீடத்தின் மேல் உகாரத்தை ஏற்றினார்; டு ஆயிற்று. மூன்றாம் எழுத்தும்; அதை அப்படியே வைத்தார். அகரத்தின் விகாரமாகிய ஆவும், உகரம் சார்ந்த உயிர் மெய்யாகிய டுவும், இயல்பாகவே உள்ள ம் என்ற எழுத்தும் சேர்ந்து ஆடும் என்ற சொல்லாயிற்று. அந்தச் சொல்லினூடே அகர உகர மகரங்கள் கரந்து நின்று ஓங்கார ஒலியை எழுப்பியது போலச் செய்கின்றன.

ஆடும் மயில் என்று பாடினால் ஓசை கெடும். சந்தியில் ஆடுமயில் என்று வந்து மகரம் கெட்டுப்போகும். ஆடும் தோகை, ஆடும் குதிரை என்று வேறு வகையாகச் சொன்னால் மகரம் திரிந்துவிடும். மகரம் திரியாமல் இயல்பு ஒலியோடு நிற்கவேண்டும் என்று எண்ணிய அருணகிரியார் ஆடும்பரி என்று தொடங்கினார். பகரத்துக்குமுன் நிற்கும் மகரம்தான் கெடாமலும் திரியாமலும் உள்ளபடியே இருக்கும் அல்லவா?

காயக் கிலேசம் கழற்றும் திருமுலை
வாயில்வாழ் பேரொளிநீ என்னுளத்தில் மன்னுதியோ

ஆகவே ஆடும் என்ற சொல் அகார உகார மகாரங்களைத் தன்னகத்தே அடக்கி ஓங்காரத்தை முன் வைத்துத் தொடங்கியதாகச் செய்தது. இது சொல்லின் அமைதி.

இத்துணை நுட்பமாக ஆராய்வதை விட்டு 'ஆடுகின்ற மயில்' என்ற பொருளை எண்ணினாலும் ஓங்காரத்தின் நினைவு உண்டாகும். ஆடாதமயில் ஓங்காரத்தை நினைப்பூட்டுவதில்லை. ஒரு காலைத் தூக்கித் தோகையை விரித்து ஆடும் மயிலின் தோற்றத்தைப் பார்த்தால் தமிழில் உள்ள ஓ என்ற எழுத்தின் வடிவம் தோற்றும். மயிலே பிரணவத்தின் அம்சம் என்பது அருணகிரிநாதர் கொள்கை.

"ஆன தனிமந்த்ர ரூபநிலைகொண்ட
தாடுமயில் என்ப தறியேனே"

என்று திருப்புகழில் இக்கருத்தைப் புலப்படுத்தியிருக்கிறார்.

ஆதலால், ஆடும்பரி என்னும் தொடர் பிரணவ சொரூபத்தை நினைப்பூட்டும் பொருளையுடையதாக நிற்கிறது. எழுத்து வகையாலும் சொற் பொருளாலும் பிரணவத்தை முதலில் கொண்டது கந்தர் அநுபூதி என்பது இப்போது தெளிவாகிறதல்லா? எல்லா ஒலிகளுக்கும் மூல ஒலி பிரணவம் என்பார்கள். அதுவே முடிவுமாகும். அதனை முன் வைத்துத் தொடங்கும் கந்தரனுபூதி எழுதும் மறையைப் போன்ற சிறப்புடையது. ஞானசம்பந்தர் காட்டிய வழியைப் பின்பற்றியது. 'ஆடும்பரி' 'ஆடும்பரி' என்று சொல்லிச் சொல்லி ஆனந்தமாக ஆடும்படி செய்கிறது.

பலிக்கும் கருணைக்கண் பார்த்தருள்செய் ஞானக்
கலிக்காமூர் வாழும் கண்ணனைக் காணுதோ

பிறவி

(அ. ராமமூர்த்தி)

1

இறைவனடி சேராதார் நீந்த முடியாத ஒரு பெருங் கடலாக பிறவியை வர்ணிக்கிறார் வள்ளுவர். ஆசையின் காரியமே பிறவி என்பது புத்தரின் திருவாக்கு. "பிறவா வரம் தாரும் பெம்மானே" என்று பக்தர் ஒருவர் பாடுகிறார். பொதுவாகப் பிறவி துக்கமயமானது என்பதே ஆன்றோர்கள் பலரின் முடிவு.

ஆனால் அதே சமயத்தில் 'மனிதப் பிறவியும் வேண்டுவதே இம் மாநிலத்தே' என்ற அறை கூவலையும் அப்பர் வாயிலாக நாம் கேட்கத்தான் செய்கிறோம். எனவே குறிப்பிட்ட ஒரு நிலையில் பிறவி வேண்டுவதாகவும், அல்லாத போது வேண்டாததாகவும் இருக்கிறது என்று நாம் தெளியலாம்.

குறிப்பிட்ட ஏதாவது ஒன்று வேண்டுமா என்பது, வேண்டுவோனையும் அவனது இலட்சியத்தையும் பொருத்ததாகும்.

ஞானிகளுடைய பாஷை வேறாயிருக்கலாம். ஆனால், முடிவு வேறாயிருக்காது!

2

உண்மையில் பிறவி வேறு—பிறப்பு வேறு. நம்முடைய ஜன்மம் பிறவி. ஆனால் நம்முடைய சரீரம் 'பிறப்பு' ஆகும். பிறவி தன்மையையும் பிறப்பு உருவத்தையும் குறிக்கிறது. உருவம் அநித்யமானது. தன்மை நித்தியமானது. நித்யம்—அநித்யம் இரண்டு மற்றது பிரம்மம். அது எல்லாமாயும் அதே சமயத்தில் ஏதுமற்றதாயும் உள்ளது.

போய்க்காடு புக்குப் பொசுங்கி அழியுமுனே
சாய்க்காடு வாழும் தருமதுரை சாராதோ

பாமரனுக்குப் பிறவியே பிறப்பாக மாறிவிடுகிறது. பண்பட்டவனுக்குப் பிறப்பு பிறவியாகி விடுகிறது. பிரம்ம ஞானிக்கோ பிறவி இனிப் பிறவா வரம் பெற்றுவிடுகிறது.

பிறவிக்கு நோக்கம் உண்டு. அது இனிப் பிறவாமை தான்! இனிப் பிறவா நிலையை எய்தவே இப்பிறவி கொடுக்கப்பட்டுள்ளது.

கலைஞன் கையில் உள்ள கத்திக்கும் கொலைஞன் கையில் உள்ள கத்திக்கும் வித்தியாசம் உண்டு. ஆயுதம் ஒரு சாதனம். சாதகனைப் பொருத்ததுதான் அதனுடைய உபயோகமுமல்லவா?

பிறவி ஒரு சாதனம். அது ஒரு பெருங்கடலாயினும் அதையும் நீந்திக் கடக்க முடியும் என்று வள்ளுவர் கூறுகிறார். பிறப்புக்கும் துன்பங்களுக்கும் காரணம் ஆசையென்றாலும், ஆசை நசித்தால் நசிக்க வேண்டியன யாவும் நசித்து விடுமென்பதும் காணக்கிடக்கிறது.

3

மனிதனுடைய மனம் ஒரு குரங்கு. அது தாவும்; கொம்பையும் எட்டிப் பிடிக்கும். கிணற்றிலும் பாய்ந்து விடும். அதனுடைய இயல்போடு சென்று அதனை ஆட்கொள்ள ஆத்ம ஞானி ஒருவனால்தான் முடியும். ஞான சுகத்தை அனுபவித்த பெரியோர்கள், தாம் பெற்ற இன்பமும் சுகமும் இவ்வையகமும் பெற வேண்டுமென்றே பிறவிக்கு நிந்தாஸ்துதி பாடினர்: பிறவி துக்கமயமானது என்று மேன்மையான 'பிறவிகள்' எல்லோரும் கூறினர்.

பிறவி தெய்வீகம் பெறும் பொழுது அது வேண்டுவதாம். இல்லாவிட்டால் ஒழிய வேண்டியதாம்.

தங்க நகை அனலிலிட்டு உருக்கப் பட்டால் தனித் தங்க உலோகமாகிவிடுகிறது. முழுமையோடு கலந்து தனியுருவத்தை இழந்து விடுகிறது. ஆயினும் தங்கம் தங்கந்தானே?

அதைப் போலவே, பிறவி நோக்க முடையதாகி நிறைவு பெற்றுவிட்டால், முழுமையான இறைமையோடு ஒன்றிவிடுகிறது. நோக்கமுடைய பிறவி என்றும் அழிவ தில்லை.

இலட்சியம் அற்றவனுக்குத்தான் பிறவி ஒரு பெருஞ் சுமையாக இருக்கும். பிரம்ம தேஜஸில் விருப்பமுள்ள வனுக்கு பிறவி உல்லாசப் படகாக இருக்கும்.

பிறவிக்கு அர்த்தம் கொடுப்பவன் பிரம ஞானியே. ஜென்மம் வேண்டாமென்பது ஞானமல்ல. அது கடைத் தேற வேண்டும் என்பதுதான் ஞானம்.

பிறப்பால் சரீரம் ஈனத் தன்மை யடையவில்லை. செய லாலும் நோக்க மின்மையாலும் தான் இழிவு பெறுகிறது.

ஒரு தரம் பிறந்துவிட்ட ஒன்று அழிய வேண்டும் என்ற அவசியம் இல்லை. பிறவியின் நோக்கம் ஈடேறும் பொழுது அதனுடைய கேவலத் தன்மைதான் அழிகிறதே தவிர அது அழிவதில்லை.

பிறவிக்கு இடையே பிறந்தது சரீரம். அது அழி கிறது. பிறவி ஞானத்தால் நிறைவு பெறுகிறது.

சரீரி துக்கியானல் சரீரம் துக்கிக்கிறது. அவன் சாயுஜ்யம் பெற்றால் சரீரம் அழிவதில்லை. ஆனல் அலட்சிய மாகிறது (அவனுக்கு)

4

பகவான் பல பிறவிகளை எடுத்தார். மனிதப் பிறவி மட்டுமல்ல. மச்சமாக; பன்றியாக, சிங்கமாக, குரூபியா கப் பலவாறு தோன்றினர். பிறப்புகள் பண்பால் பிறவி களாகிப் பரமனல் பிரம்மமாயின. பிறவிக்கு நோக்கம் கற்பித்துக் காட்டினர் பகவான்.

கண்காட்டுவாய் நுதலில்; கைகாட்டுவாய் அபயம்;
வெண்காட்டு வேந்தே விழலற் கருளுதியோ

அழிபவை எல்லாம் அற்பமானவை. அழியாத ஒன்று உள்ளது. அதுதான் பிரம்மம். அதை அடைவதுதான் பிறவிக்கு நோக்கம். அந்த நோக்கம் நிறைவேறினால் பிறவியே பிரம்மமாகிவிடும்.

பிறப்புக்கும் பிறவிக்கும் உருவமும் வளர்ச்சியுமே வித்தியாசம். அர்த்தமுடைய பிறப்பு பிறவியாகிறது. அர்த்தமுடைய பிறவி பிரம்மஸ்வரூபமாவதில் ஆச்சரிய மில்லை.

“வேண்டாதது” என்று எதுவுமே கிடையாது. வேண்டுவோன் வேண்ட வேண்டிய ஒன்று உள்ளது. அதுதான் சாக்ஷாத் காரம்; மெய்ப் பொருள். வேண்டு வோனுக்கு வெகு சமீபத்தில் உள்ளது அது.

பிறவி வேண்டாமென்று வெறுக்காதீர்கள். அதற்கு உருமாற்றம் செய்யுங்கள். அதாவது அதற்கு நோக்கமும் அர்த்தமும் காட்டுங்கள். முடிவு என்ன? அது இனிப் பிற வாப் பூரண நிலையைப் பெற்றுவிடும். ஈயிலும் எறும்பிலும் ஈசன் உள்ளான் என்பதை மறவாதீர்கள். இந்திரியங்கள் யாவும் அவன் பணி புரியட்டும். அதைவிட இப் பிறவிக்கு இனி வேறு என்ன பேறு வேண்டும்?

மிடி

(C. V. சுப்ரமண்யம்)

ஐஸ்வர்யமாவது உண்மைப் பொருளை ஒரு பொருளி னிடத்துக் கண்டு இன்புறுதல். அனைஸ்வரியமாவது உண் மைப் பொருளை பொய்ப் பொருளினிடத்துக் கண்டு வியப் புற்றுத் துன்புறுதல். உதாரணமாக மரயானையை மரயானை யாகக் கண்டு மகிழ்தல் இன்பம். மரயானையை யானையாகக்

உருக்காட்டி வானில் உயர்ந்தஅருள் ஈயும்
திருக்காட்டுப் பள்ளித் திருவிழைந்து நிற்பேனே

கண்டு வியப்புறுதல் துன்பம், அதுபோல, தேகத்தைத் தேகமாகக் காணுதல் இன்பம். தேகத்தை ஆத்மாவாக வியவகரித்தல் துன்பம். மேற்கூறிய அனைஸ்வரியம் மிடி என்றும், பிராந்தி ஞானம் என்றும், அஞ்ஞானம் என்றும் கூறப்படும். மிடி தோன்றியவிடத்து சந்தேக, விபரீதங்கள் தோன்றி மயக்கம் உண்டாகும். மயக்கம் நீக்கி உண்மை ஞானமாகிய மெய்ஞ்ஞானத்தை உபதேசம் செய்தருளுபவர் சத்குருநாதன்.

"பிரமம் கெட மெய்ப்பொருள் பேசியவா"

—கந்தர் அநுபூதி

உள்ளதை உள்ளபடி மனதால் நினைத்து, வாக்கால் உரைத்து, காயத்தால் மகிழ்ந்துணர்ந்து ஆனந்தப்படுவதே அநுபூதி இன்பம். அநுபூதி இன்பம் பெற குரு அருள் மூலகாரணமாகும். குருஅருள் பெற, தக்க இடம் சாது சங்கம் அல்லது அடியார் திருக்கூட்டம். மேற்கூறிய திருக்கூட்டத்தில் கலந்து மகிழ்ந்து உணர்ந்த அநுபவமே, மனம் வாக்கு, காயம் ஒருமைப்பட்டு மிடியாகிய அஞ்ஞானம் நீங்க சிறந்த உபாயமாகும்.

மிடியால் வரும் குறைபாடுகள் (1) வடிவு, (2) தனம், (3) மனம், (4) குணம், (5) குடி, (6) குலம் முதலியவை களைப் பாதிக்கும்.

"மிடியென்றொரு பாவி வெளிப்படினே"

கந்தர் அநுபூதி

இதன் தாத்பரியம் சமம், தமம், விடல், சகித்தல், சிரத்தை, சமாதானம் முதலிய ஆறுவித சம்பத்துகளுக்குக் குறைவு ஏற்பட்டு, மிடியாகிய அனைஸ்வரியத்தினால் மனம் துக்கம் அடைகின்றது என்றபடி. மிடி தவிர்க்க சாது சங்க

மும், சமநிலையும், குருசரண சேவையும், குருபஜனமு மாகும்.

மேற்கூறிய பஜனத்தில் அடியார் திருக்கூட்டத்தில் கலந்து மகிழ்தலானது, முதலாவதாக அடியார்களின் வடிவைக் கண்ட அளவில், சாதிமத பேதமின்றி சமமாகிய சிவ உணர்வு ஏற்பட்டு மனம் சாந்தி அடைய காரணமாகும். இரண்டாவதாக, அடியார்களின் தரிசன விசேஷத்தின் பயனும் அடியார்கள் பாராயணம் செய்துவரும் சங்கீர்த்தனங்களை, சிரவணம் செய்து மகிழும் செவிச்செல்வமாகிய ஐஸ்வரியத்தினால் அகவுணர்வு ஏற்பட்டு மனம் சாந்தி அடைவதாகும். மூன்றாவதாக, அவ்விதம் சிரவண மகிமையினால் மனமானது, விகசித்த புஷ்பம்போல விரிந்து, தன்னை அறியும் அறிவில் மேம்பாடு பெற்று, இதுகாறும் பற்றியிருந்தவைகளை விட்டுவிடும் தன்மை ஏற்பட்டு சாந்தி அடையலாகும். நான்காவதாக, மட்டவிழ் மலராய் மனம் விரிந்தபொழுது, அதன் வாசனை பலத்தினால் தன் குணம் சத்துவ குணமாகப் பெற்று, தனக்குற்ற துன்பங்களைச் சகிக்கும் தன்மை ஏற்பட்டு மனம் சாந்தி அடையலாகும். ஐந்தாவதாக, அடியார் திருக்கூட்டத்தில் கலந்து மகிழ்ந் திருத்தலே தன் குடிப்பிறப்பை உயர்குடிப் பிறப்பாக்கி, சிறந்த பக்தி சிரத்தை ஏற்பட்டு மனம் சாந்தி அடையலாகும். ஆறாவதாக, அடியார் திருக்கூட்டத்தில் கலந்து மகிழ்ந்திருத்தலே தன் குலப் பிறப்பையும் உயர்குலப் பிறப்பாக்கி, சிறந்த சமாதானம் ஏற்பட்டு மனம் சாந்தி அடையலாகும்.

சரண கமலாலயத்தை........
மிடியால் மயக்கமுறுவேனோ—திருப்புகழ்.

ஆக ஒவ்வொரு நாளும், அல்லது வாரத்தில் ஓய்வு நாளாகிய அந்நாளிலாவது, பல அலுவல்களினிடை குறிப்

பார்வாழ மாஞானப் பாலருந்து பிள்ளைவரும்
சீர்காழி தெய்வத் திருவிருந்து கொள்வேனோ

பிட்ட சில நிமிஷ நேரங்கள் குருத்தியானம் செய்து குரு பஜனம் செய்ய ஒதுக்கி வைத்து, பாராயணம் செய்வதுவோ, அல்லது பாராயணம் கேட்பதுவோ, குருநாதன் திருஅருளால் மிடியால் மயக்கமுறுமல் மனம் சாந்தி அடைய சிறந்த சாதனமாகும்.

அரிதா? எளிதா?

(மு. பொன்னையா பிள்ளை)

(142-ஆம் பக்கத் தொடர்ச்சி)

"நீடுலக முண்மையன நினைந்து புறக்கரும நிட்டனுய் முப்
பிறப்பின் முத்தனும் அவனே நாடரிய முமூட்சு:" என்றனர்.
இந்த முமூட்சு திசை நீங்கி அப்பியாசியாய போது
"மனமதுவே சகமுதலாத் தோன்ரு நிற்கும், சொனமனது
சங்கற்ப வடிவே யாகும்'

"மனது தான் வளரும்போது மற்றதும் வளரும்
மனது தான் நசிக்கும் போது மற்றதும் நசித்த தாமே" எனவும்,
"சித்த மிலாக்கால் செகமாதி யில்லை, சித்தமென ஒரு காலு
மில்லை, சித்தமென ஒருபொருளு மிலே, சிந்திக்கச் சித்தே யாகும்"

எனவும்,

"சங்கற்ப நாசத்தால் எளிதாக மனநாசந் தானே யெய்தும்"

"அலையு மனத்தை அகத்து அடக்கும்
அவனே சரியை கடந்தோனும்" எனவும்,

"அடக்கிக் கருத்தின் அலைவறுப் போன் அவனே சகலத்
தியாகி" எனவும்,

"அந்தக் கரணம் அறிந்து துறப்பார்க்குப்
பந்தமிறந்த தென்றுந் தீபற"
"மனேசலனமே சீவபர செகத்தாம்; சலன மிலாக்கால்
மாசற்ற அறிவே" எனவும்,

பாலற்காத் தாளம் பரிந்துதவிப் பண்கேட்ட
கோலக்கா என்னுள் குடிபுகுதல் என்றேயோ

"எந்நாள் வாழ்வதற்கே மனம் வைத்தியால் ஏழை நெஞ்சே
அந்தண் ஆரூர் தொழுது உய்யலாம்
மையல் கொண்டு அஞ்சல் " எனவும்,

இது போன்றே பலர் அப்பியாசியாக இருந்த போது கூறியதாம். இந்த அப்பியாசியை,

"உலகம் கனவெனக் கண்டு உள்ள நற்கருமஞ் சேர்ந்து
பிறப்பிரண்டினில் அப்பியாசி" என்றனர்.

இந்த அப்பியாச திசையை நீங்கி அனுபவ திசையில்,

"காண்பதும் சொப்பனம் கருத்துஞ் சொப்பனம், பூண்பதும்,
புசிப்பும், புணவதும் சொப்பனம், சேண்படு நரகம் சுவர்க்
கம் சொப்பனம், விண்படும் இவைக்கெலாம் விசுத்
தன்றுனரோ"

"மனமாம் நினைவே சங்கற்பம் மனத்தின் நினைவற்றது
சிவமே" எனவும்,

"கள்ளமனச் செயல் கண்டு தெளிந்த பின்
வெள்ளை வெளியேயென் றுந்தீபற,
வேத முடிபதென் றுந்தீபற" எனவும்,

"சித்தப் பிராந்தி தெளிந்த நன்னிஷ்டர்கள்
சுத்தப் பிரமமென் றுந் தீபற,
சொல்லொணு தானந்தம் உந்தீபற"

"நினைவின்றி நிற்பதுவே நிட்டை, ஞானம், மோக்ஷம், சிவம்;"

"மனங்கரண முதலவெலாம் சிந்தனை செய்யாமையால் உதித்
தனவாம் சிந்தித்தாற் சேரப் பொய்யே"

"சங்கற்ப சக்தியினுச் சகம் போலத் தோற்றியிடும் சங்கற்ப
சக்தியதும் தன்னைவிட வேறில்லை" எனவும்

இது போன்றே பலர் அனுபவ திசையினின்று கூறியுளார். இதனை,

"வீடுலக விவகாரம் நினையாமல் விவேகம் மேவி ஓர் பிறப்
பினும் முத்தன் அநுபவியே" என்றனர்.

இந்த அனுபவ திசை நீங்கி ஆரூட திசையில்,

"தன்னைவிட வேறென்றுந் தானில்லாத் தன்னிடத்தில்
தன்னினைவினலே சகம்போலத் தோன்றிடுமே"

கள்ளிருக்கும் கொன்றை மதி நதிகள் கண்டசடைப்
புள்ளிருக்கும் வேளூர்ப் புனிதனருள் பூணேனே

"சங்கற்ப சக்தியினற் சகம்போலத் தோன்றியிடும்,
சங்கற்ப சக்தியதுந் தன்னைவிட வேறில்லை"

"நினைவென்ற சங்கற்ப நிசவடிவை நோக்கிடத்தில்,
தனையன்றி வேறில்லை தங்கத்திற் பணிதியைப் போல்"

"பாராமல் பதையாமல், பருகாமல் யாதொன்றும்,
ஓராது உணர்வுடனே ஒன்றினையே நெஞ்சமே"

"விருப்பு வெறுப்பில்லாத வெட்ட வெளியதனில்
இருப்பே சுகமென்று இருந்தனையே நெஞ்சமே"

இந்தப் பிரகாரம் அறிஞர்கள் தாங்கள் அந்தந்தப் பருவங்களில் அனுபவித்து அறிந்த உண்மையைப் பிறரும் அறிந்து அனுபவித்து உய்தற்கு வேண்டி கருணையாற் கூறிப்போந்ததாகக் கொள்வதுவே தகுதியாம்.

கயிற்றில் பாம்பைக் கண்டு பயம் நடுக்கம் முதலியன உண்டாயினும், கயிற்றை அறியப் பயம்முதலியவை இன்றி சுகமாவது போல், தன்னிடம் மித்தையாகத் தோன்றிய மனதால், பிறப்பிறப்பு முதலிய அனர்த்தங்கள் உண்டாயினும், பஞ்சு மலையில் தீப்பொறி பட்டால் போல் தனதுண்மை ஞானம் உதிக்க, சர்வ துக்கமும் மித்தையாய்ப் பரம ஆனந்தம் பிராப்தியாம்.

தன் உண்மையை மறந்த மறதியே நினைப்பாய அகமாம். இந்த அகமாய மனதால் இகவடிவத் தோற்றத்தில் சர்வ துக்கமும் அடைந்தது போன்றுளதால். மறந்த தன்னை நினைத்துணர்ந்தால் அகமெனும் மனம் இல்லாமையாம்.

வஸ்துவில் மனம், முன்னும் பின்னும் இல்லாமல் மத்தியில் அவாந்தரமாகத் தோற்றியது. இவையே செகசீவ பரமாய திரிபுடித் தோற்றமாகும்.

இவை ஆகாயத்தில் நீலநிறம் இல்லாமல், இருப்பது போல் தோற்றுகிறதே போல், ஆன்ம வஸ்துவில் கானல் நீர்போல் தோற்றல் மாத்திரமாம்.

எண்ணார் எனினும் எண்ணச்செய் தண்ணருளார்
கண்ணார் கோயிலுளாய் கண்ணருளிற் காணுயோ

தானும் ஆன்மாவில் ஸ்புரித்த ஸ்புரணவடிவ ஞாபகம் தனக்கு வேறனால், அதற்கு இதவடிவாய தன்னுண்மை தோன்றாது. அந்த ஞாபகம் தானானால் தனக்கு வேறாக யாதேனுந் தோன்றா. ஆதலால் ஞாபகமே எல்லாமாகும்.

நித்திரையிற் றேன்றும் திமிரப் பேயுடன் யுத்தம் செய்வது போல் மனத்தை அடக்குதல் அரிது எனும் விவகாரம். திமிரப் பேய் இல்லையெனத் தெளிவது போலும் மனமடக்கல் எளிதெனும் விவகாரமாகும்.

அரிதென்பதும் எளிதென்பதும் தனை மறந்த மறதியில் நிகழ்வதாம். மலடி ஒருத்தி கனவில் குழந்தை பெற்றாள். அந்தக் குழந்தை பதறி அழப் பொறாது சட்டென்றெழுந்து தழுவிக் களிக்க,விழித்தவள் போன்றது, மனதை அடக்க முயல்வது. ஞான விழிப்பில் மனமில்லை.

மரத்திற் பேய் உளதெனக் கேட்டவனுக்கு அம்மரமே பேயாய்த் தோற்றுவ போல், தன்னில் மனமெனத் தானே மனமாகத் தோற்றும் தனக்கு வேறாக மனமென்பது இல்லையாகும்.

உடலும் நிழலும் போல் தானும் மனமுமாம். உடலன்றி நிழலும் தானன்றி மனமும் இல்லை யென்பது சத்துக்கள் கண்ட உண்மை.

கவுதாரி எனும் பக்ஷி பளிங்கு மண்டபத்தினிடம் செல்ல,தன் நிழல் தோன்ற அதைப் பார்த்து தன்னைப்போல் வேறொரு பக்ஷியென்று அதனுடன் போராடுவது போல் ஆகும், தான் மனதுடன் போராடுவது.

ஒருவன் பந்து ஒன்றைக் கையால் தட்டத் தட்ட-அது எழும்புவது போன்று, மனதை அடக்க அடக்க அது அடங்கா;பந்தைத் தட்டுவதை நிறுத்தினால் அது ஒருபக்கம் போய் விழுந்து கிடக்கும். அதுபோல் நாம் செயலற்றிருந்தால் மனமும் இலவாகும்.

விசாரமில்லாத காலம் மனம் உளது போலிருந்து, விசாரிக்கப் பொய்யாம்.

நன்றியிலார் தம்மை நயப்படுத்தி உய்விக்கும்
நின்றியூர்த் தேவே நினக்கே அடைக்கலமே

1 ஒன்று எனும் எண்ணொன்று இருந்தால் அதோடு, 0, சைப்பர் சேரப் (10) பத்தாம். எத்தனை 0 சேர்ந்ததோ அத்தனை தொகையாம். (1000) ஆயிரம் எனும் எண்ணில் முதலில் இருக்கும் ஒன்றை அழித்தால் மற்ற சைபர்களை என்னென்று சொல்லலாம்.

அதுபோல நானெனும் போதம் உள்ளவரை இத மெனும் செகத் தோற்றாவுண்டு; அகம் இலை இகமும் இலையாம்.

ஓர் குறியை முன்னிட்டு திக்கு பலவானற் போல், அகமென்னும் ஒன்றை முன்னிட்டு இகமும் பலவாம். குறி யின்றித் திக்கிலை போல், அகமின்றி இகமிலை.

ஓர் புருடன் தம்பியை யின்றி அண்ணனுகான், மகனை யன்றித் தகப்பனுகான் போல், இகத் தோற்றாவின்றி அக மென்பது இலை.

தன்னிழலை மறைத்தற்கு மண் போடுவது போன்று, மனதை அடக்க முயலும் விவகாரமும்.

நெடுந்தூரம் நீண்ட தன்னிழல், நாம் நின்ற நிலையிலே நின்றால் தன் பாதத்திற் சேர்ந்தொடுங்குவது போல், பல வாக விரிந்த மனதும், நாம் மௌன முற்றிருக்க தன் பால் தானே வந்து ஒடுங்கும்.

தனக்கெனச் சொரூபமில் மனதை உண்டென்றும், அதை அடக்குதல் அரிதெனவும், எளிதெனவும் சொல் வது, மாயாமோக நித்திரையிற் காணுந் தீர்க்க சொப் பனமே.

ஒருவன் நித்திரையில், கயிற்றினிடம் பாம்பைப் பார்த்து பயந்து நடுங்கி விழித்தான். விழித்த பின்பு, கயிறு வாஸ்தவமா, பாம்பு வாஸ்தவமா; இரண்டும் பொய்யாம் போல், தன் மறதியிற் றோன்றும் மனதும் தன்னில் விழிக் கப் பொய்யாம். பொய்யான மனதை அடக்கல் அரிதென

னும், எளிதெனனும் என்னும். வாய்மை கண்டு வாழ்வோம்.

தான் சரியாயிருந்தால் எல்லாம் சரியாம்; தான் கோணலாயிருந்தால் யாவும் கோணலே யாம். அளக்குங் கோல் 36 அங்குலம் சரியாயிருந்தால், அதனுல் அளக்கப்படும் வஸ்துக்களும் சரியாயிருக்கும். 1 அங்குலம் குறைந்தோ அல்லது அதிகமாயோ யிருந்து அளந்தால் சரியாமா? இதனுல்,

"திரமலடி மைந்தனுக்குத் தேகமுதலாங் குணங்கள் செறிதல்
தானும், புரையனும் அக்குணங்களெல்லாம் பொன்றுதலும்
வெட்டவெறும் பொய்யே"

"தன்நிமிர்வுந் தன்வளைவுந் தான்தேரா மாப்புலவீர்
அன்னியத்தையோ நிமிர்ப்பீர், ஆ, ஆ, ஆ,—என்னமதி"

என்றனர் அறிஞர்.

"தானுகினர்க்கு அதுவுந் தானுகவே விளங்கும்,தானுகாதார்க்கு
அயலாய்த் தான் விளங்கும்—தானே, அறிவானந்தப் பொரு
ளாம் அன்னியமுந் தானே,தெரிவாரோ வேறுயினர்'

"சிந்தையை யடக்கியே சும்மா விருக்கின்ற திறமரிது"

ஆதலால்,

தீர்க்க சொப்பனத்தின் விவகாரமென அறிய யிரண்டும் மித்தை யாகும்.

"மலடி மைந்தனும் தானுவிற் புருடனும் வான்மலர் முடிசூடி
இலகு கந்தர்வ நகரினிற் சுத்திகை யிரதக விலேபேசிக்
கலகமாய் முயற்கொம்பினுற் குத்தியே களைத் திருவரு
மாண்டார்
அலகை யாயினரெனும் விவகாரத்தை அறிந்தவன் மயங்கானே."

எனும் அறிஞரின் உண்மை உரையே உண்மை.

வாழ்க சத்தியம்.

ஈடுபட ஒட்டா திருந்தபெரும் பாவத்தேன்
நீடூரில் வாழ்சிவனே நின்னளியால் உய்வேனே

முருகனடியார் 16

பலவேசர்

(ரசபதி)

முத்தமிழ்க்குப் பிறப்பிடம் முதன்மைப் பொதியம். சிறந்த அதன் பக்கத்தில் ஒரு சிற்றூர். அதில் சேறும் சகதியுமான ஒரு சேரி. சிறு சிறு குடில்கள். எங்கும் பொத்தல். ஏழ்மை வாழ்வு. எனினும், அவைகளில் வசிப்பவர்கள், பண்பு நிறைந்த பள்ளர்கள். வாழ்விக்கும் அமைதியில் வளர்ந்தவர்கள்.

அவர்களுள் ஒருவன் **ஆதன்.** புனித அவன் மனைவி **பொன்னி.** சிரித்த முகம். விறுவிறுத்த நடை. கணவன் ஈடுபடும் எந்தப் பணியிலும், கலந்து கொள்வதில் அவளுக்குத் திருப்தி.

ஆதன் ஒரு பஜனைக்கூடம் அமைத்தான். சேரியர் பலரையும் சேர்த்தான் பஜனை செய்யப் பழக்கினான். அமைதியாக வாழ, இதுவல்லது வேறு வழி யில்லை என்று, அடிக்கடி அவர்கட்கு அறிவித்தான். இந்தப் புண்ணியப் பயனோ என்னவோ, பொன்னி இப்போது பூரண கர்ப்பிணி; உத்தம அத் தம்பதிகட்கு, புண்ணியமான நாளில், பிறந்தது ஒரு பிள்ளை.

ஆதனுக்கு வயது ஐம்பத்தாறு. பொன்னிக்கு நாற்பது. இவ்வளவு நாள் பொறுத்துப் புத்திரப்பேறு. என்ன விசித்திரம்? சேரி முழுதும், கூடிக் கூடி இது குறித்தே பேச்சு.

களையான முகம். பார்த்தவரை வசீகரிக்கும் பார்வை. தாயிடம் பல நேரம். தந்தையிடம் சில நேரம். தவழ்ந்து, இருந்து, எழுந்து, நடந்து, ஓடி ஆடும் பருவம் அடைந்தார் **பலவேசர்.** ஆம். அதுதான் பெற்றோர்கள் பிள்ளைக்கு வைத்த பெயர். சேரி பஜனை, பிள்ளையின் சிந்தையைக் கவர்ந்தது.

விசாகம் திருச்செந்தூரில் விசேஷமாம்; போய் வருவோம் என்றாள் பொன்னி. புனித அவள் இஷ்டப்படி, ஆதன் புறப்பட்டான். குறித்த இடம் சென்றான். கடலில் பொன்னியுடன்நீராடினன். அருமைப் பிள்ளைக்கும் நீறு அணிந்தான். குடும்பத்துடன், கோபுர வாயிலுக்கு நேரே வீழ்ந்து கும்பிட்டான்.

விசாகத்தை முன்னிட்டு, பல பக்தர்கள், திருப்புகழ்ப் பாராயணத்தை முன்னும் பின்னுமாக மூன்று நாள் நிகழ்த்தினர். பல

மன்னி பலபிறப்பின் மாழ்கி வருந்துமெனை
வன்னியூ ரானடியில் வாழ்விக்க வாரானோ

இடங்களில் சுப்ரமண்ய பரத்துவ சொற் பொழிவுகள், அரோஹர முழக்கம். ஆம். ஆம்! செந்தில் பதியே சிவலோகம் என்னும் உணர்வை இவைகள் எழுப்புகின்றன.

செய்மையில் இருந்தே, இவைகளை மூவரும் சிரவணித்தனர். பலவேசர் புனித உடலம் புளகித்தது. உள்ளம் பாகாய் உருகியது. அதே சமயம், அவருடைய முன்னைய புண்ணியம் முறுவலித்து எழுந்தது.

குகா! முருகா! குமரா! செந்திலாதிபா என்று பக்தர்கள் எழுப்பிய பேரொலி, கடல் அலைகள்போல் எங்கும் கலகலத்தது. இனிய அவ்வொலி, செவியிற் பாய்ந்து, புனித இதயத்தில் புகுந்தது. திருவிழாக் கொண்ட செந்தில் குமரன் திருவுரு, பலவேசர் கண் வழிப்புகுந்து, உள்ளத் திரையில் ஊன்றியது. மாபெரும் அத் தலத்தைப் பிரிய மனமில்லை. பெற்றோர் ஊர்க்குத் திரும்பினர். என்ன செய்வது? விதியே என்று தொடர்ந்தார் பலவேசர்.

ஊர்க்கு வந்த பின், பலவேசர் எவருடனும் உரையாடவில்லை. உள்ளக் குமரன் உருவை உணர்ந்து, குகா! முருகா! செந்திலாதிபா! என வாய்த்த நாமத்தை வழுத்தி யிருந்தார், நிமல அருள் முதலியன; முகத்தில் நிழலிட்டது.

வர வர, குல ஒழுக்கம் குமைந்தது. அகவொழுக்கம் அமைந்தது. முருக பக்தி முதிர்ந்தது. தந்தையுடன் தொடர்ந்தார் பலவேசர். நூதன சேரிகளில் நுழைந்தார். பஜனை உணர்ச்சியைப் பரப்பினர். காலத்தை வீணாகக் கழிக்காதீர்கள்! வாழ இதுதான் வழி என்று, இனிய உபதேசம் செய்தார்.

கனிவிக்கும் கல்வி கற்க, இருந்த குலநிலை இடம் தரவில்லை. ஆயினும், அவர் இதய குகையில் இருக்கின்ற பெருமான், அவர்க்கு அருள் நூற்களின் நுட்பத்தை அவ்வப்போது அறிவிக்கின்றான். இதற்கு மேல் கல்வி இருக்கிறதா என்ன? பலவேசர்க்கு, இப்போது வயது இருபத்தைந்து.

திருமண முயற்சிகள் தீவிரமாயின. அறிந்த பலவேசர் அஞ்சினர். ஒரு நாள், தந்தை தாயை வந்தனை செய்தார்.

அம்மா! அப்பா! தேகமே ஒரு பாரம். அதன் வழி பெருகும் குடும்பம் ஒரு கோரம். திருவருள் சித்தித்த ஒருவன்தான், திருமணம் செய்து கொள்ள வேண்டும். அந்த வாழ்க்கையில் இன்பம் அமையும். இல்லையானல், தம்பதிகளின் இடையில், விதிதான் திமித நடையிடும். வேண்டிக் கொள்கிறேன்; இப்போது எனக்கு மணம் வேண்டா!

ஆள்வி அருளுலகம்! அண்ணாநீ என்கின்றேன்
வேள்விக் குடியுறையும் வேந்தேநீ ஓராயோ

பலவேசா! உலகம் நீ உரைக்கும் நுட்பத்தை உணர்ந்துளதா என்றான் ஆதன்.

உணராமையால்தான், கண்ணீரும் கம்பலையுமாய் ஏதோ காலம் தள்ளுகிறார்கள் மக்கள் என்றார் பலவேசர்.

பொன்னி! இவன் நம் பிள்ளையல்ல; தெய்வ மகனடி என்றான், அதிரும் குரலில் ஆதன்.

உண்மையே உண்மை என்றாள் பொன்னி.

ஊரை அடுத்த காட்டு நடுவில் ஒரு கடப்ப மரம். ஒரு நாள் அதன் நிழலில் பலவேசர் அமர்ந்தார்.

அன்பர்களை ஏறுமுகம் செய்யும் ஆறுமுகா! ஆலயத்துள் வந்து, உன்னைச் சேவிக்கும் உரிமையில்லை. எங்கும் நீ இருக்கின்றாய்; எளிய என் உள்ளத்தும் இருக்கின்றாய். அதனால் வருந்தவில்லை அடியேன். மேலோர் உறவு மேவாதபடி, தடை விதித்த பள்ளர்குலப் பிறப்பே ஒரு பாழ்வினை. வினைவழி விளைந்த அது குறித்தும் அஞ்சிலன். உன் உறவு உள்ளவரை, எனக்கு என்ன குறை?

உன் திருவடி நீழல் என்று பெறுவனோ? இந்த ஓரே ஏக்கந்தான் இருக்கிறது என்று, கண்ணீர் பெருக்கிக் கதறினர். குகா! முருகா! குமரா! செந்திலாதிபா என்று ஒவ்வொரு நாளும் அங்கே இருந்து உருவேற்றுவதே தொழிலானார்.

பிள்ளையின் நிலை கண்டு, ஆதன் அலறினன். பொன்னி பொருமினள்.

பலவேசா! என்ன இது? தாழ்ந்த குலத்தர் நமக்கு இங்கிலை தகுதியல்ல என்றாள் தாய்.

எள்ளும் நீரும் இறைப்பாய் நீ யென்றிருந்தேன்! அப்பா! மோசம் செய்து விடுவாயோ என்று அதிர உரைத்தான் ஆதன்.

தாழ்குலத்தவர் தவம் செய்தால், உலகம் தண்டிக்குமே! உணர்வாயோ நீ என்றார் உறவினர்.

மகளைத் தருகிறேன்; மணந்துகொள்! இல்லறமே நல்லறம் என்று சொன்னாள் அத்தை.

பகபகவென்று சிரித்தார் பலவேசர்.

என்றைக்கும் சாக்கடைச் சேறுதானே வாழ்க்கை. அதைச் சிறிது பரிசுத்தப் படுத்துவது பழுதா? கர்மச் சேற்றைக் கழுவப் பிறந்தோம்; மேலும் அதைப் பூசிக் கொள்வது மேன்மை யாகுமோ?

ஓடி உழல்வாழ்க்கை ஊன்றி உளம்வெறுத்தேன்
பாடிப் பதிவாழ் பரமே அருளுதியோ

கந்தன் நாமமே கற்கண்டு; அதை மறந்திருப்பார்க்குப் பழுதுண்டு. தாழ்வு உயர்வென்று தடுமாற வேண்டா. எவரும் பிறப்பால் இழிந்தவர்கள்தான்!

ஆண்டவன் திருவடிகளில் அர்ப்பணிக்கவேண்டிய இதயத்தை, எங்கெங்கேயோ செலுத்துவதால் இடர்தான் விளைகிறது. அடியில் உளத்தைப் பாய்ச்சும் அடியார் அடிப்பொடி எம்முடி. ஓம்! என்று வாய் மூடிக் கண் மூடி, உள் முகமாகிய பலவேசர், பழையபடி உருவேற்ற லாயினர்.

அவன் போக்கில் விடு! அதனால் உனக்கும் பொன்னிக்கும் உய்வுண்டு என்று, ஆதன் செவியில் எவரோ ஓதுவதுபோல் இருந்தது. திருவருள் அறிவிப்பு என்பது இதுதானோ?

நான் முன்னேயும் சொன்னேன்; அவன் நம் மகனல்ல; அவன் ஆண்டவனுடைய பிள்ளை என்று, அழுது கொண்டே அறிவித்தான் ஆதன். உண்மையென்று பொன்னியும் உணர் கிறாள். பெற்ற மனம் பித்து. வயிறு குழம்புகிறது. கண்ணீர் கசிந் தது. வேறு என்ன செய்வது என்று தேறினர். ஆண்டவன் சித்தம்போல் ஆகட்டும்; வாருங்கள் போவோம் என்று, உறவினர் வலிந்தழைத்துச் சென்றனர்.

மற்றொரு நாள், தன்னை அலங்கரித்துக் கொண்டு, அத்தை மகள் வந்தாள். அத்தான்! அத்தான்!! என்னைப் பாருங்கள்! ஓ! கண்ணைத் திறக்கவே மாட்டீர்களா? பதிலே இல்லை. கண் பிசைந்து திரும்பினள். அவ்வளவுதான் பிராப்தம் என்பது அவள் எண்ணம்.

ஒரு நாள் இரவு மணி ஒன்று. பழைய உறவு வந்து வந்து பாதிக்கிறது. நாம் இங்கிருந்து போய்விடுவதே நலம் என்று எண்ணி பலவேசர் எழுந்தார். ஒரே மூச்சாக நடந்தார். திருச் செந்தூரை யடைந்தார். எல்லையை மிதித்த போதே இன்பம் சிலிர்த்தது. ஏதாயினும் பணி செய்வம்; இங்கேயே இருப்பம் என்று துணிந்தது அவர் இதயம்.

மாட வீதிகளைச் சுத்தம் செய்தார். நீர் தெளித்தார். சந்நதி வீதியில் மாவிலைத் தோரணம் கட்டினார். நெடுங்கடலில் நீராடினார். நெற்றிக்கும் நீறு தரித்தார். ஆலயப்புறம் வலம் வந்தார். தனி யிடத்தில் அமர்ந்தார். சிறிது நேரம் மௌனம்.

குகா! குகா என்று உள்ளம் கூவியது. முருகா! குமரா! என்று வாய் மொழுவியது. தன்னை மறந்தார். அன்புமயம் ஆனார்.

கணம்சேர் கயிலைமலைக் கண்ணே கதிநீ
மணம்சேரி வாழ்வேஎன் மன்மனத்தில் தங்குதியே

உச்சிப் போது. கடும்பசி காதடைக்க, எளிய இடத்தில் பிட்சை எடுத்தார். உண்டார். பழையபடி தொண்டு. ஆரம்பத்தில் மந்திர ஜபம். அந்தத்தில் தியானம்.

யாத்திரிகர் பலர், இவர் மாபெரும் தொண்டு கண்டு மகிழ்ந் தனர். செல்வம் சிறந்த சிலர், உவந்து காசுகளை உதவினர். அவைகளை, அந்தந்த நாள்களிலேயே அடியவர்க்கு அளித்தார்.

* * *

ஒரு நாள் நள்ளிரவு. ஊர்க்கோடியில் ஒரு மரத்தடியில் உறங்கு கின்ருர் பலவேசர். யாரோ தன்னை உருட்டுவதை உணர்ந்தார். கண்விழித்தார். எழுந்தார். கழுக்கு மெழுக்கென்று இருவர் எதிரில் இருந்தனர்.

எவ்வளவு பணம் இருக்கிறது? மரியாதையாகச் சொல்! என் னடா விழிக்கிருய்? கொடுக்கிருயா இல்லையா? என்று, பொல்லாத பாவிகள் அவரை நையப் புடைத்தனர்.

முருகன் அடியார் வருந்தலாமா? அதைக் கருதி, யாத்ரீகர் மூலம் அகப்படுவதை அடியவர்க்கே அளித்தேன்; இப்போது என் கையில் ஒரு காசு கூட இல்லையே என்று, அடி தாங்க முடியாமல் பலவேசர் அலறிஞர்.

அதை அறிவோம்! இனிமேல் அகப்படுவதை எங்களிடம் தர வேண்டும்! இல்லையேல், தோலை உரித்து விடுவோம்; நாளையிரவு சந்திப்போம். ஜாக்கிரதை என்று உருமினர். அதன்பின் அங் கிருந்து அகன்றனர்.

அவர்கள் வறுமை அப்படி. அதனுல்தான் இந்த ஆத்திரம் என்று, ஆறுதல் அடைந்தது அவர் மனம்;

* * *

மறுநாள் கிடைத்தது முப்பது பொன். இரவு மணி ஒன்பது.

இன்று ஒரு காசும் அகப்படவில்லை. நாளைய செலவிற்கு என்ன செய்வது? என்று, ஐவர் அர்ச்சகர் பேசிக் கொண்டே செல்வது, வழியே வந்த பலவேசர் காதில் விழுந்தது.

புனித உத்யோகம் உடைய இவர்கட்கு, ஐயோ! பொருள்முடை யிருக்கலாமா? என்று எண்ணியது பலவேசர் இதயம்.

ஸ்வாமி! இதோ முப்பது பொன் இருக்கிறது; எடுத்துக் கொள் ளுங்கள் என்று தரையில் வைத்தார்; எட்டச் சென்ருர்; மகிழ்ந்த அவர்கள், பணத்தின் மேல் நீர் தெளித்தனர். வாயார பலவேசரை வாழ்த்தினர்; இன்பம் கொண்டு எடுத்துச் சென்றனர்.

சூரட்ட வேலன்தன் தாதை! திருக்குறுக்கை
வீரட்ட மன்னு! யென் ஆணவத்தை வீழ்த்தாயோ

இரவு மணி 12. நேற்று அச்சுறுத்திய பாதகசாதகர் இருவரும் வந்தனர்.

பள்ளா! எங்கேடா பணம்?

மன்னித்துக் கொள்ளுங்கள்! அயர்ந்து வந்த அர்ச்சகர்கட்கு அகப்பட்டதை அளித்தேன். நாளை பார்க்கிறேன்!

அவர்கட்கு நீ அளித்ததை அறிவோமடா அறிவோம்! அவர்கள் உன்னால் அடிபட்டதுதான் கண்ட பலன். பணத்தையும் பறித்துக் கொண்டோம். அஃது இருக்கட்டும். எங்கட்கு என்றதை, நீ அவர்கட்கு எப்படிக் கொடுக்கலாம்?

என்ன பிள்ளை! வாக்குத்தவறிய இவனை என்ன செய்யலாம்?

தேவரே! நமக்குக் கொடாதவனுக்கு நாம் கொடுக்க வேண்டியதுதான் என்றார் பிள்ளை. உடனே தேவர் உருத்தார்.

கும்! தம்! கும்!

முருகா! முருகா! ஐயோ முருகா! என்று துள்ளிப் பலவேசர் துடித்தார்.

நாளைக்காயினும் சொன்னபடி நடந்து கொள்கிறாயா? பார்க்கலாம் என்று கறுவிச் சென்றனர் பாதகர். எண்ணுகிறார் பலவேசர்.

மணம் வேண்டாம் என்று பெண்ணை மறுத்தேன். பொன்னைத் தொட்ட பாவம் இது. ஆறுமுகம், இதை நமக்கு இவர்கள் மூலம் அறிவிக்கிறதோ என்னவோ என்று உணர்கிறது உள்ளம்.

மறுநாள் முதல், எவர் கொடுத்த காசையும் வேண்டாம் என்று மறுத்தார். தனியிடத்தில் தங்கினால், கொள்ளையர் தொள்ளை செய்வர். அதனால், தனியிருந்த ஊர் சத்திரத்தில் தங்கினார். அங்கு இருக்கப் பிடிக்கவில்லை. மறுநாள் வேறு தர்மசத்திரம். அங்கும் அப்படித்தான். மாறி மாறி வேறு வேறு இடங்களில் தங்கினார். ஏன்? என்ன செய்தி?

கற்றவர், காஷாய தாரிகள், வைதிக மேலவர், யாத்திரை மேற்கொண்டு வந்தவர்கள் பலரைச் சத்திரத்தில் சந்தித்தார்.

கற்றவர் இரவெல்லாம் காவியம் பாடினர். அவைகளில் பாவையர் வருணனை பாதி; கேட்கவே செவிகள் கூசின.

காஷாயதாரிகள், ஆஷாட பூதிகளாக மாறினர். பாதி யிரவில் கொள்ளை யடித்துவந்த பொருளைத் தமக்குள் பங்கு போட்டுக் கொள்வது; காலையில் துறவு தாங்கி, முருகா முருகா என்று வீறிடுவது.

விருப்புடனே என்முன் விளையாடல் செய்யும்
கருப்பறியல் ஊருடையாய் கண்ணருள்செய் யாயோ

வைதிகர்கள் இரவெல்லாம் சூதாடுவது; பகலில் பசுக்கள்; இரவில் கயமை உறவில் காலாழ்வது; காணச் சகிக்கவில்லை.

ஐயோ! ஆண்டவனே! புனித இப்பதியிலா இந்தக் கோரம்? என்று இவர்கட்கு விடுதலை? கதறியது இதயம்.

முருகா! நீ திருவுளம் பற்றினால் இவர்கள் திருந்துவரே! இரக்கம் காட்ட மாட்டாயா? வேண்டுமேல், அவர்கட்காக எனக்குத் தண்டனை தா!

அவர்கள் நல்லவர்கள்தான்; காணும் என் பாவக் கண்கட்கு உலகம் இப்படிக் காட்சியாகிறது எனில், அத்தகைய பாவப் பிறப்பை உன் சந்நிதியில் போக்கிக் கொள்கிறேன் என்று, ஆறு நாள் வரை எண்ணி அழுதார். தினமும் உணவின்றித் திருப்பணிகள் செய்தார்.

ஆறும் நாள். நள்ளிரவு. ஒருவரும் அறியாமல் கோபுர உச்சியில் ஏறினார்.

ஆறுமுக துரையே! தீராயோ துயரம்? பேராயோ பிறவி? நேராயோ என்முன்? எவருடைய இதயத்தும், உன் அருள் முத்திரை வைக்க வாராயோ ஐயா! என்று வீறிட்டுக் கூவி வீழ்ந்தார்.

அவ்வளவுதான். அவருடைய புண்ணிய ஆன்மா, முருகன் பொன்னடி நிழலில் புகுந்தது.

வாழ வழி செய்யாயும் உத்தமர்க்கு, இல்லை உலகில் இடம். அநியாய உங்கள் அக்கிரமத்திற்கு, தான் பிராயச்சித்தம் செய்து கொண்டான் பக்தன் என் பலவேசன் என்று, திருச்செந்தூரில் உள்ள எவர்செவியிலும், அன்று இரவு முழுதும் உலுப்பி ஒலித்தது ஓங்கார நாதம்.

அலறினர் அனைவரும். இரவு எவர்க்கும் நித்திரை யில்லை.

பொழுது விடிந்தது. கோபுரத்தடியில், பலவேசர் புனிதத் திருமேனி. கண்டவர் கதறினர். பொருமிப் புலம்பினர். அவர் திருமேனியைச் சமாதி செய்தனர்; அழுது கதறி ஆராதித்தனர்.

மக்கள் பாபத்திற்குத் தன்னைப் பலிபாக்கிய அவர் கதையை, கற்றவர் எழுதினர். செல்வம் பெற்றவர் சிந்தை திருந்தினர். வாய்மை வளர்ந்தது. ஒழுக்கம் உயர்ந்தது. இனிய அவர் வாழ்க்கையை எண்ணி உருகி, மாபெரும் அன்பர் மகிழ்ந்தனர்

வாழ்க முருகன் அடியவர்!

அரக்கு நிறத்தின் அவுணர்தமைத் தேய்த்த
குரக்குக்கா வாழும் கோ நின் அடைக்கலமே

நமிநந்தியடிகள்

(கி. வா. ஜகந்நாதன்)

(129-ஆம் பக்கத் தொடர்ச்சி)

சோழநாட்டில் அந்தணர்கள் வாழும் ஊர் ஏமப்பேரூர். அங்கே சிவபெருமானிடம் மாறாத பக்தியும் சிவகைங்கரியத்தில் இடைவிடாத ஈடுபாடும் உடையவராக வாழ்ந்தார் நமிநந்தியடிகள். வேதநூற் பயிற்சியும் ஒழுக்கச் சிறப்பும் இரவும் பகலும் இறைவன் திருவடியே சிந்தித்து வாழும் இயல்பும் உடையவர் அவர்.

அவர் திருவாரூர் சென்று புற்றிடங் கொண்ட நாயகரைத் தொழுது வழிபட்டார். அவ்வாலயத்தில் உள்ள பல சந்நிதிகளுக்கும் சென்று வணங்கினார். திருவாரூர்த் திருக்கோயிலுக்குள் பல சந்நிதிகள் உண்டு. அவற்றில் திருவாரூர் அரனெறி என்பது ஒன்று. அங்கே பல விளக்குகள் ஏற்றி யாரும் வந்து வழிபடும்படி செய்யவேண்டும் என்ற எண்ணம் அவருக்கு உண்டாயிற்று.

அக்காலத்தில் திருவாரூரில் சமணர் மிகுதியாக இருந்தனர். கோயிலைச் சுற்றி அவர்களே குடியிருந்தார்கள். திருவிளக்கு ஏற்றும் திருத்தொண்டில் மனம் வைத்த நமிநந்தியடிகள் ஊரில் சில இல்லங்களில் நெய் வாங்கி அதனை நிறைவேற்றலாம் என்று எண்ணினார். பொழுது சாயும் தருணமாதலின் ஊருக்குள் நெடுந்தூரம் சென்று வாங்குவதற்கு நேரம் இராதென்று நினைந்து அருகில் உள்ள ஒரு வீட்டுக்குள் சென்று விளக்குக்கு எண்ணெய் வேண்டுமென்று கேட்டார். அந்த வீட்டில் இருந்தவர்கள் சமணர்கள். அவர்கள் ஒன்றும் கொடுக்காததோடு அவரைப் பரிகசிக்கவும் தொடங்கினார்கள். "உங்கள் சிவபெருமான் கையில் கனல் இருக்கிறதே! அவருக்கு விளக்கு எதற்கு ஐயா? விளக்கு ஏற்றத்தான் வேண்டுமென்றால் குளத்தில் நிறைய நீர் இருக்கிறது. அதை முகந்து வந்து விட்டு எரியும்" என்றார்கள்.

பாழ்செய் கருமலத்தின் பற்றறுத்தே ஆளும்சீர்
வாழ்கொளிபுத் தூராய் வாழவரம் தாராயோ

அந்த வார்த்தையைக் கேட்டதும் நமிநந்தியடிகளுக்கு மிக்க வருத்தம் உண்டாயிற்று. "இறைவன் திருவருள் இருந்தபடி இதுவேயோ!" என்று வாடினர். திருக்கோயில் சென்று மனம் நைந்து அரனெறிப் பெருமான் சந்நிதியில் விழுந்தார். அப்போது அசரீரியாக ஒரு வாக்கு எழுந்தது. "நீர் கவலை அடைய வேண்டாம். திருக்குளத்தில் உள்ள நீரை முகந்து வந்து விளக்கு ஏற்றும்" என்று இறைவன் திருவருளால் எழுந்தது உரை. அதைக் கேட்டு மனம் உருகினர் தொண்டர். சென்னிமிசை நீர் தரித்த பிரான் திருவருளை எண்ணி வியந்தார். உடனே திருக்குளம் சென்று இறைவன் திருநாமத்தைக் கூறித் துதித்து நீரை முகந்து கொண்டு வந்து அரனெறியப்பன் ஆலயம் அடைந்து அகலில் அதை வார்த்தார். திரியை முறுக்கி விட்டு ஏற்றினர்.

என்ன வியப்பு! விளக்கானது சுடர்விட்டு எரிந்தது. உடனே ஆலயம் முழுவதும் பல விளக்குகளை ஏற்றினர். குளத்தில் நிறையத் தண்ணீர் இருக்கும்பொழுது அவருக்கு என்ன கவலை? மனம் கொண்ட மட்டும் எங்கும் விளக்கு ஏற்றி வைத்தார். இரவு முழுவதும் எரிவதற்கு ஏற்றபடி விளக்கிலெல்லாம் நீர் வார்த்தார். இந்த நிகழ்ச்சியைக் கண்டவர் யாரும் வியப்பில் ஆழ்ந்தனர். கேட்ட சமணரும் வியந்தார்கள்.

பின்பு அவ்விரவில் நமிநந்தியடிகள் தம் ஊருக்குச் சென்று செய்யவேண்டிய நியமங்களை முடித்துச் சிவபூஜை செய்தார். அப்பால் அமுது செய்து துயின்றார். விடியற்காலை எழுந்து சிவபூஜை செய்துவிட்டுத் திருவாரூருக்கு வந்தார். அரனெறித் திருக்கோயிலுக்குச் சென்று இறைவனை வணங்கிக் கோயிலுக்கு உள்ளும் புறம்பும் செய்யவேண்டிய தொண்டுகளைச் செய்தார். மாலை வரவே முதல் நாள் போலவே குளத்து நீரால் எங்கும் விளக்கேற்றி இன்புற்றார்.

இவ்வாறே பல காலம் அரனெறியாலயத்துத் திருத்தொண்டு புரிந்து வந்தார் நமிநந்தியார். நாளடைவில்

எண்ணிப் படிக்கமனு, ஏன்றுகொளும் எம்மான் நீ
மண்ணிப் படிக்கறைநான் மன்னவரம் தாராயோ

சமணர்களுடைய வலிமை குறையவே பழையபடி திருவாரூராலயம் விளக்கமடையத் தொடங்கியது. திருக்கோயிலில் திருவிழாக்கள் முறையாக நிகழலாயின. நமிநந்தியடிகள் வீதி விடங்கர் திருவிளையாடலைக் காட்டும் விழாவையும் பங்குனி உத்தர விழாவையும் நடத்தினர்.

ஒருநாள் தியாகராசப் பெருமான் வழக்கப்படி அருகில் உள்ள மணலி என்ற ஊருக்கு எழுந்தருளினன். அப்போது எல்லாச் சாதியினரும் உடன் சென்று தொழுதார்கள். அக்காலத்தில் திருக்கோயிலுக்குள்ளே செல்ல இயலாமல் இருந்த சாதியினரும் தமக்காகவே இறைவன் வெளியே எழுந்தருளுகின்ருன் என்ற உவகையுடன் உடன் சென்று வழிபட்டு அன்புமீதூர்ந்து இன்புற்றனர். அந்தக் கூட்டத்துடன் சென்ற நமிநந்தியடிகள், மணலியை அடைந்து இறைவன் திருவோலக்கத்தையும் சேவித்து மகிழ்ந்தார். அங்கிருந்து மீண்டும் வீதிவிடங்கப் பெருமான் திருவாரூர்த் திருக்கோயிலுக்கு எழுந்தருள திருத்தொண்டரும் வழிபட்டார். அப்பால் இரவு வரவே தம் ஊர் சென்ருர். சென்றவர் தம் தூய திரு மனையினுள்ளே செல்லாமல் அயர்வினல் புறத்தே திண்ணையில் படுத்துத் துயிலத் தொடங்கினர்.

அவர் வராமையை எண்ணி அவருடைய மனைவியார் வெளியே வந்து பார்க்க, அவர் திண்ணையில் உறங்குவதைக் கண்டார். "சிவபூஜையும் அக்கினி காரியமும் செய்து அமுது செய்தபிறகு பள்ளி கொள்ளலாமே" என்று தம் நாயகருக்கு அப் பெருமாட்டியார் உணர்த்தினர். நமிநந்தியார், "பெருமான் மணலிக்கு எழுந்தருளியபோது நானும் போனேன். எல்லாச் சாதியினரும் கலந்த கூட்டத்தோடு போனமையால் தூய்மை கெட்டது. ஆதலால் மறுபடியும் நீராடிவிட்டுப் பூசை செய்யவேண்டும். இங்கேயே நீராட வேண்டியவற்றைக் கொண்டு வா" என்று சொன்னர். அவர் மனைவியார் அவற்றைக் கொண்டுவரும் பொருட்டு உள்ளே போனர்.

தாமாம் தரத்தினரைத் தாவியனு பூதிதரும்
ஓமாம் புலியூராய் உன்னுநெறி ஓதாயோ

அயர்ச்சி மிகுதியாக இருந்தபடியால் அவர் மறுபடியும் துயிலில் ஆழ்ந்தார். அப்போது அவர் கனவில் வீதிவிடங்கப் பெருமான் எழுந்தருளி, "திருவாரூரில் பிறந்தவர்கள் எல்லாரும் நம்முடைய கணங்கள். அதை நீ காண்பாயாக!" என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்தார். உடனே விழித்துக்கொண்ட தொண்டர், "இரவில் பூஜை செய்யாமல் தூய்மை கெட்டது என்று இருந்தேனே! திருவாரூர்ப் பிறந்தவர் கூட்டத்தோடு தானே நான் சென்றேன்? அவர்கள் யாவரும் சிவ கணங்களானால் அவர்களுடன் செல்வது எவ்வாறு தீட்டாகும்? இறைவன் நமக்கு இன்று அறிவு கொளுத்தினன்" என்று எழுந்து அப்படியே இறைவனுக்குப் பூஜை செய்தார். தம் மனைவியாருக்குக் கனவு கண்டதைச் சொன்னார்.

அன்று இரவு கழிந்து விடிந்தவுடன் மிக்க விரைவாகத் திருவாரூருக்குப் போனார். போனபோது அந்நகரில் இருந்த எல்லோருடைய உருவமும் தேசுடைய சிவகண உருவமாகத் தோன்றவே அதிசயித்து முடிமேல் கைவைத்துக் கீழ்விழுந்து பணிந்தார். "இந்த உண்மையை இதுகாறும் அறியாமற் போனேனே!" என்று வருந்தினார். "உண்மையை உணர்வித்ததோடு இந்த அரிய காட்சியையும் காணச் செய்தானே!" என்று மகிழ்ந்தார்.

சிவகணமாகத் தோற்றியவர்கள் மீட்டும் பழய உருவத்தோடு தோற்றம் அளித்தனர். "எம்பெருமான் நமக்கு மட்டும் உண்மையைப் புலப்படுத்த இது செய்தான்" என்று தெரிந்து ஆலயம் சென்று போற்றிப் புகழ்ந்தார்.

இவ்வாறே பலகாலம் எம்பெருமானுக்குத் திருவிளக்குத் தொண்டும் பிற தொண்டுகளும் செய்து பல காலம் வாழ்ந்த நமிநந்தியடிகள், இறுதியில் இறைவன் திருவடி நிழலில் கலந்து பேரின்பப் பெருவாழ்வைப் பெற்றார்.

ஊனாட்டும் உள்ளூர் உறைகின்றேன் ஆயிடினும்
கானாட்டு முள்ளூர் கருதுவது காணாயோ

இருமை வகை

(இளவழகனார் விரிவுரை)

இறந்தவர்கள் இறந்த பின் இருக்கும் நிலையைப்பற்றி இப்பொழுது பார்க்கப் போகிறோம். இங்கே பலருக்கு எண்ணம் போகும், வாழுகின்றவர்களைப் பற்றிய பல சிக்கல் முன்னிற்கும்போது இறந்தவர்களின் நிலையைப்பற்றிப் பேச வேண்டிய கட்டாயமும் விரைவும் என்னவோவென்று.

ஆசிரியர் திருவள்ளுவனார் கட்டளை யிட்டிருக்கிறார், "இருமை வகை தெரிந்து ஈண்டு அறம்பூண்டார், பெருமை பிறங்கிற்று உலகு" என்று. இருமை வகை தெரிந்து கொண்டு தான் இங்கே கடமைகளைச் செய்ய வேண்டும் என்பது அவர் கருத்து. அவர் பேச்சைக் கேட்க வேண்டுமா? வேண்டாவா? அவர் சொற்படி நடக்க வேண்டும் என்றே எல்லாரும் கூறுவார்கள், நாமும் கூறுவோம்.

இருமை எவை:

இருமை என்று அவர் கூறினாரே, அது எவற்றைக் குறிக்கின்றது? செம்மை கருமை என்று யாராவது சொல்ல முன் வரலாம். அப்படிக் கொள்ளலாமா என்று பார்த்தால், செம்மை கருமை என்பவை நிறங்கள். நிறங்களோ ஏழு என்று அறிவோம். ஆகவே, இருமை செம்மை கருமை யாகாது. சரி, நன்மை தீமை என்று கொள்ளலாமோ என்றால், வழக்கில் நன்மையும் தீமையும் இருமை என்று வந்ததில்லை. அவை யிரண்டும் இருவினை என்றே வழங்கி வருகின்றன. நாம் வழக்கையும் ஒத்தல்லவா பார்க்க வேண்டும். அப்படிப் பார்த்தால், இருமைக்கு, இம்மை மறுமையே பொருத்தம்; வழக்கும் ஆகும்.

இம்மை இந்தப் பிறப்பின் நிலை என்றால், மறுமை அடுத்த பிறப்பின் நிலை; அல்லது இம்மை இப்போதுள்ள

சாரையூர் மேனிச் சதுரா! மகிழ்வுதரும்
நாரையூர் நம்பா! நலியா தெனையருடி

நிலை என்றால், மறுமை இறந்த பின் இருக்கும் நிலையைக் குறிக்கும்.

வகை தெரிந்து அறம் புரிதல் :

இருமை வகை தெரிந்தே கடமைகளைச் செய்ய வேண்டும் என்றதால், உணவு தேடுதல், அலுவல் பார்த்தல், வாணிபம் செய்தல், தேனித்தல் முதலிய எந்தக் கடமை செய்தற்கும் இருமை வகை தெரிந்திருக்க வேண்டும் என்றுகின்றது. இனி, இல்லறமானாலும் துறவறமானாலும் இருமை வகை தெரிந்தே கடைப்பிடிக்க வேண்டும் என்பதும் புலனாகின்றது.

மேலும், மறுமை வேண்டாம் என்றால், வாழ்க்கையே வேண்டாம் என்று ஒதுக்குவதாகும். மறுமை வகை தெரியாது எது செய்தாலும் அது அறமாகாது; மறமாகும். மறுமை அறியாது எல்லார்க்கும் கல்வியைப் பரப்பினாலும், சீர்திருத்தங்களைச் செய்தாலும், நற்செய்கைகள் என்று அவரவர் கருதக் கூடியவற்றைச் செய்தாலும் அவையெல்லாம் பொருந்திய அறமாகா. இருமை வகை தெரிந்து செய்யும்போதுதான், அவை அறமாகின்றன.

ஏதுவும் விளைவும்

நம்முடைய வாழ்வு, முன்பின் தொடர்பு உள்ளதாக இருக்கிறது. காரண காரியமின்றி உலகத்தில் ஒரு சிறிய செயலும் நடைபெறுவதில்லை அப்படி நடக்கிறதென்றால் யார் வேண்டுமானாலும் தெரிவிக்கலாம். முன்பின் தொடர்பில்லாமல், காரண காரிய அமைதியில்லாமல், பேசுவோரையும் செயல் செய்வோரையும் யாரென்று குறிப்போம், பித்தர் என்றுதானே சொல்லுவோம்?

வித்தின்றி மரமில்லை; முன் பிறப்பில்லாமல் இப்பிறவியில்லை; இப்பிறவி வினை கொண்டால் இனியும் பிறப்பு உண்டு. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்பது உண்மை மொழி. முற்பகல் செய்யாவிட்டால் பிற்பகல்

அடம்பூர் திருமுடியாய் அண்மியார் போற்றும்
கடம்பூர் வதிவாயைக் காணுங்கண் காட்டாயோ

வினைவேது? இதனால், காரண காரியமும் முன்பின் தொடர்பும் உண்டென்பது தெரிகின்றது.

நாம் குழந்தையாகப் பிறந்தோம்; ஏன் என்று தெரிந்து கொள்ள வேண்டாமா? இவ்வுலகை விடுத்துப் போகிறோம். இனி என்ன ஆவோம் என்பது தெரிய வேண்டாமா? படிப்பது பொருள் தேடுவது எல்லாம் எதற்கு என்று தெரியாமலே செய்யலாமா? எப்படியோ பிறந்துவிட்டோம் என்று சும்மா இருக்கலாமா? ஆராய்ந்து பார்த்தல் வேண்டும்.

எழு பிறப்பு

திருவள்ளுவர் 'எழுமை எழு பிறப்பு' என்று ஒன்று குறிப்பிட்டிருக்கிறார். அதற்குப் பரிமேலழகர், 'வினை தொடர்வதற்குரிய எழு பிறப்பு' என்று பொருள் எழுதியுள்ளார். நாம் இப்போது ஒன்று செய்தால் அதற்குப் பயன் அடுத்த பிறவியிலேயும் விளைந்து முடியும்; அல்லது மேலும் தொடரவும் செய்யும். அப்படி மிகுதியாகத் தொடர்ந்தால் ஏழு பிறவிகள் வரை தொடரும் என்பது கருத்து. 'எழுமை எழு பிறப்பு' என்பதில் இரண்டுமுறை ஏழு வருகின்றது; மற்றொரு ஏழு என்பது, நடப்பன, பறப்பன, நீந்துவன, ஊர்வன, நிற்பன என்பனவும், மனிதர், தேவர் என்பவருமாகிய எழுவகைப் பிறவிகளை உணர்த்தும்.

ஆராய்ச்சி அளவை :

நாம் பிறர் சொல்லுவதை உடனே நம்பிவிடமாட்டோம்; ஆராய்வோம். இதனை 'உத்தி' என்று சொல்லுவர். உத்திக்குப் பொருந்தினாலும் உலகத்தில் நடைமுறையில் உண்டா என்றும் பார்ப்போம்; இது 'அநுபவம்' எனப்படும்; 'காட்சி' அல்லது 'பிரத்தியட்சம்' என்றாலும் இதுவே. இவற்றோடு இன்னும் யாராவது அப்படிச் சொல்லியிருக்கிறார்களா என்றும் பார்ப்போம். ஏனென்றால், நம் உத்திக்கும் அநுபவத்துக்கும் எட்டாதனவும் உல

பந்தணவு கையார் பார்வதியார் வாழ்த்தும்
பந்தணநல் லூர்சார் பரமெனைப் பாராதோ

கத்தில் இருக்கலாமல்லவா? இதற்குக் காரணம், உத்தி அநுபவங்களுக்கு மேலும் ஏதோ தேவைப்படுகிறது. இதனைச் 'சுருதி' என்று சொல்லுவர். இவையெல்லாம் பகுத்தறிவுக்கு வேலை கொடுப்பவை.

இப்போதுள்ள பிறப்பால், இதற்குமுன் பிறப்பிருந்திருக்க வேண்டும் என்பதும், வரும் பிறவியும் நேரலாம் என்பதும் தெளிவு. ஏன் பிறந்தோம் என்று ஒருவர் நம்மைக் கேட்டால், விடை சொல்ல முடியாமலிருந்தால் எப்படி? எப்படியோ பிறந்தோம் என்று சொல்லிவிடுவது தன்னிச்சையாகப் பேசுவதன்றிப் பகுத்தறிவோடு பேசுவதாகுமா?

உடம்பும் உயிரும் :

இது உடம்பு ; இதனுள் உயிர் இருக்கிறது; இது உடம்பு என்று யாரும் அறிவர்; உள்ளே உயிர் இருக்கிறது என்பதில் ஒருகால் ஐயமிருக்கலாம். நம்மவர்க்கு இதில் ஒன்றும் ஐயமில்லை. பௌத்தர்க்கு உயிர் என்ற ஒன்று இல்லை என்பது கொள்கை.

உயிர் அறியும், உடம்போ அறியாது; உயிரும் தானே அறியாது. அறிவித்தால் அறியும் இயல்புடையது; இப்படி உயிரும் உடம்பும் மாறுபட்டவை ; உயிர் நுண்ணியது ; உடல் பருவடிவது.

உயிரும் உடலும் கூடிய நிலையில் ஓர் உண்மையை நாம் அறிந்து கொள்ள வேண்டி யிருக்கிறது; பருவுடம்புக்கும் நுண்ணுயிர்க்கும் இடையே ஆவி போன்ற ஓர் இடைத்தரமான உடம்பு இருக்கின்றது என்பது.

கால்பந்தை நினைவு கூர்வோம். இப் பந்து இயங்கும் போது, உள்ளே காற்று இருக்கிறது என்று பொதுவாகச் சொல்லுவோம். ஆனால் மேலுறைக்கு உள்ளே சுருங்கவும் விரியவும் கூடிய பை ஒன்றும் இருக்கிறது என்பதையும் கவனித்தால் அறியலாம். உட்பையினுள்ளே காற்றைச் செலுத்தி நிறைவித்தால் அது மேலுறையோடு இணங்கி

வஞ்சனூர் ஆக்கை வழுக்கிவிடா ஆதரவால்
கஞ்சனூர் வந்தணையும் காதலனீ யாதியரோ

வேலை செய்யும். மேலும், காற்றடிக்கும் குழாய்க்கும் உட்பைக்கும் இணைப்புக் குழாயும் இருக்கிறது. இம்மென் பதமான பை தூக்கிக் கொடுக்கும் அமைப்புள்ளது.

பந்தில் மூன்று பிரிவு பார்த்தோம், மேலுறை, உட்பை, காற்று என்பன. அப்படித்தான் நம்முடலும் மேல் உடல், உள் உடல், உயிர் என்று மூன்று பிரிவுகளுடன் இருந்து இயங்குகின்றன.

ஒருவர் முரடராக இருக்கிறார். மற்றொருவர் சாந்தராக இருக்கிறார். இருவரும் சேர்ந்து ஒரு செயல் நடக்க வேண்டியிருக்கிறது என்றால், இவ்விருவரையும் தொடர்பு படுத்தி இயக்க, இடையில் வேறொருவர் இருந்து உதவுதலைக் காண்கிறோம்.

மின் இயக்கம் இருக்கிறது. அதற்கும் மேல் உறை, உட்கம்பி, மின் என்று மூவகை நிலை இருந்தாலல்லது அதனைப் பயன்படுத்த முடிவதில்லை.

உள்ளுடம்பு

இப்படி மூன்று வகைகளின்றி எதுவும் செயல்படாது; உடம்பையும், காற்றுப்போல் அசையும் ஆன்மாவையும் தொடர்பு படுத்த 'ஆவியுடல்' ஒன்று வேண்டும். ஆன்மா கட்புலனாற் காண வொண்ணாதது; அதை இயக்கும் ஆவியுடம்போ கட்புலனுக்கும் சிறிது தெரியும்.

ஒருவர் ஆவி போயிற்று என்றால், அவருடைய ஆவியுடல் போயிற்று என்பதே பொருள். மற்றப்படி ஆன்மாவே போய்விட்டது என்பது முகமன்; ஆவியுடலுடன் உயிர் போயிற்று என்பதே உண்மை. "அன்றே என்றன் ஆவியும் உடலும்" என்னும் திருவாசகத்தால் ஆவி வேறு ஆன்மா வேறு என்று தெரிகின்றதன்றோ!

சான்றோர் நூலுள் இவையெல்லாம் சரியாகவே அமைந்திருக்கின்றன. நாம் தான் தெளிவு செய்து கொள்ள வேண்டும்.

தேடித் திரிந்தார் திகைக்க உளம்புகுந்த
கோடிக்கா மேவும் குணரகிதா வாராயோ

அருணகிரியும் ஐம்பூதத் தலங்களும்

(திருப்புகழ் சதுரர் சே. த. இராமலிங்கம்பிள்ளை, B.A. B.T.)

(120-ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருவண்ணுமலை :-

முன்னியது அளிக்கும் முருகவேள் அடியெடுத் தருளிய 'முத்தைத்தரு' என்ற முதற் பதிகச் சிறப்பை ஒருவாறு கூறினேம். அங்ஙனம் பாடத் தொடங்கிய கவிஞர் பெருமானர் அது முதல் சந்தங் கொழிக்கும் செந்தமிழால் ஆயிரக்கணக்கான அமிர்த கவிமழை பொழியலாயினர்.

அருள் வேண்டல்

அருணைப் பதிகத்தில் ஒரு திருப்பாடல் ஆண்டவன் திருவுள்ளங் கனிந்து அருள வேண்டும் என்று தெரிவிக்கிறது. அதன் அழகை ஈண்டுத் தருகிறேம். முருகப் பரமனை அருள் புரியும்படிப் பலகால் வேண்டியும் இறைவன் திருச்செவி சாய்க்கவில்லை. அதனல் அங்ஙனம் ஆறுமுகன் அருள் சுரக்காததற்கு நமது திருப்புகழ் முனிவர் சில காரணங்களைக் கற்பிக்கிறார்.

இருவர் மயல் :-

இன்பத்தில் திளைக்கும் ஒருவனிடம் போய்த் துன்பத்தில் திளைக்கும் ஒருவன் அவன் குறையைக் கூறினல், அவ்வளவு விரைவில் முன்னவன் அதனைப் புரிந்துகொள்ள மாட்டான். பசியே அறியாத ஒருவனிடம் பசித்தான் ஒருவன் இரக்கப் புகுந்தால், அவனது மனம் இந்த ஏழை மாட்டு எளிதில் இரங்குமா? அது போல துனபங் கலக்காத பேரின்ப வடிவினனுகிய கந்த சிவன், ஞான நங்கையர்களாகிய இரு தேவியரது கலவி மயலில் களித்திருக்கும்போது ஒருவனுகிய ஏழை அடியவன் குறை தீர வழியுண்டாகுமா? என்கிறார்.

கருமங்க ஏழை கருத்திற் குடிபுகுந்த
திருமங்க லக்குடிசார் தேவே அடைக்கலமே

அமளி விதம் :-

இம்மை இன்பங்களில் உயர்ந்ததென மதிக்கப்படும் இன்பம் மாதர் இன்பம். அதற்கு ஆதரவளிப்பது ஐம்மூன்றடுக்கிய அமளி விதங்கள். செவ்வேளினது இரு தேவியர் தந்த மயலும், நல்ல வேலைப்பாடுகள் அமைந்து கண்ணையும் கருத்தையும் கவரும் படுக்கைச் சிறப்பும் வேறு பிற செயல்களும் அலறும் அடியருக்கு அருள் செய்வதைத் தடுத்தன போலும்.

ஆரவாரம்

விண்ணவர் மண்ணவர் வேறுள அடியர்கள் அயன் மாலாதியர் குமரன் திருமுன் நின்று பெருங் குரலெடுத்து அருந்துதி முழக்கினர். அத்தனை பேர் கொடுத்த பேரிரைச்சலில் திருவருளுக்கு ஏக்குற்று நின்றலறும் தனித் தொண்டர் ஒருவர் சாற்று மொழி ஒருகாலும் திருச் செவிக்கு ஏறவே ஏறாது. ஆதலின், தமக்கு முன்னே உள்ள இருடி அயன்மால் அமரர் அடியார் இவர்களில் ஒருவர், அல்லது வடிவேலண்ணலுக்கு வலமும் இடமுமாய் அருகே அமர்ந்துள்ள அம்மையர் இருவரில் ஒருவரேனும், இவ்வேழைத் தொண்டர் படும்பாட்டை இரக்கங் கொண்டு மொழிதல் ஆகாதோ? வேலோன் எடுத்த விசுவ ரூபத்தில் அவனது திருவடியினின்று சிந்திய சிறு நுண்துகள் அணு, பூதலத்தில் பெருமலைகளாகத் தக்கது எனில், அவனது திறன் யாதெனக் கூற இயலும்! "குமர குருபரனையும், அணுவில் அசைவாயும், ஐம்பூதப் படைகொண்டும், எல்லா உருவும் பழய வடிவுங் கொண்ட வேலண்ணலே! அபயம் புகுந்த அரி அயனருக்கு அருள் சுரந்து இருளாகிய அசுரன் மேல் ஞான சக்தி வேலேவிய நம்பனே! கொடு நோய் களைந்து அருணகிரி யமர்ந்த ஐயனே! உன் திருவருளெப்படியோ?" என்றெல்லாம் பலபடி கொண்ட கருத்தெல்லாம் இரத்தினச் சுருக்கமாக உருக்கமான மொழியில்

நனந்தாள் மலர்கொள் நாயகனை நெஞ்சே
பனந்தாளிற் கண்டாலுன் பாவம் பறவாதோ

"இருவர் மயலோ அமளி விதமோ
என்னென்ன செயலோ—அணுகாத
இருடி அயன்மால் அமரர் அடியார்
இரையு மொலிதான்—இவைகேளாது
ஒருவனடியேன் அலறு மொழிதான்
ஒருவர் பரிவாய்—மொழிவாரோ
உனது பதநூள் புவனகிரிதான்
உனது கிருபா—கரமேதோ
பரமகுருவாய் அணுவில்லைசவாய்ப்
பவன முதலா—கிய பூதப்
படையு முடையாய்ச் சகல வடிவாய்ப்
பழய வடிவா—கியவேலா
அரியும் அயனோ டபயமெனவே
அயிலை யிருள்மேல்—விடுவோனே
அடிமை கொடுநோய் பொடிகள் படவே
அருணகிரி வாழ்—பெருமாளே.

எனக் கூறுவது காண்க. இத் திருப் பதிகத்தைச் சித்த சுத்தியும் சத்தியமான பத்தியும் பிறங்கப் பாடுவார்க்குத் திருக் குமரன் திருவுளம் இரங்கி அருள் பெருக்குவன் என்பதில் ஐயமுண்டோ? இவை போல்வன பலவுள. இத்துடன் அருணைத் திருப்புகழைப் பற்றிய செய்திகளை நிறுத்திக் கொள்வோம்.

கந்தரந்தாதி

இந்நூல் வில்லிபுத்தூராருடன் நமது ஓசை முனிவர் செய்த வாதத்தின் காரணமாய் வந்தது என்பர். இவ்வாதம் நடந்த இடம் அருணை யெனவும், திருச்செந்தில் எனவும் கூறப்படுகிறது. அதனை ஆய்வாளர்கட்கே விட்டு விடுவோம். கந்தரந்தாதியில் முதற் பாட்டில் அருணையம்பதி கூறப்பட்டுள்ளது. அடுத்த பாட்டில் உண்ணாமுலைக்கு மைந்தன் என்ற செய்தியும் வருகிறது. ஆனால் செந்தூரைப் பற்றியே 26 பாடல்கள் உள்ளன. அதனால் செந்திலிலோ அல்லது செந்தில் தரிசித்த பின்னரோ இவ்வாது நிகழ்ந்திருத்தல் கூடும்.

வருவான் அருள்பாடி வாழ்வுதரும் சீர்பாடிக்
குருவானன் தங்குதிரு வாய்ப்பாடி கூடுவனே

காப்புச் செய்யுள் விரிவுரை

சொற்போர் நடத்துவோர் எதிரியை அடக்கி வெற்றி கொள்ளவே வேண்டுவர். ஆகையால், எதிரும் புலவர் வில்லிதொழ எந்தை பிரானுக்கு அந்தாதி சொல் லும் சந்தக் கவிஞன் தற்காப்புக்காகச் செய்யுள் கவினுறப் பாடும்போது, தக்கன் வேள்வியில் இந்திரன், அயன் மால் உள்ளிட்ட இமையவர்கள் தருக்கடக்கிய வீரபத்திரச் சிவ னார் குமாரனும், குக்குடக் கொடி தரித்த குமரவேளின் துணைவனுமான கயமுகனைக் காய்ந்த அருணைக் கணபதியை வாழ்த்துவனே என்கிறார்.

"வாரணத்தானை[1] அயனை விண்ணோரை மலர்க்கரத்து
வாரணத்தானை[2] மகத்து வென்றோன் மைந்தனைத்துவச
வாரணத்தானை[3]த் துணை நயந்தானை வயலருணை
வாரணத்தானை[4]த்திறைகொண்ட யானையை வாழ்த்துவனே"

( ) ஐராவதக் குரிசிலான இந்திரன் (2) சங்கேந்திய திரு மால் (3) சேவலங் கொடி கொண்ட சேந்தன் (4) கயமுகா சுரன்.

இதில் தக்கன் வேள்வியில் சென்ற விண்ணோர்களைத் தருக் கடக்கிய செய்தியும், போரைத் தேடுங் கயமாமுகனைச் செருவில் சாடும் தனியானைச் சிறப்பும் கூறியது கொண்டு, எதிர்த்தோரை அடக்கவே இந்நூல் எழுந்தது என்று கூறினர்போலும்.

கந்தரந்தாதிச் சிறப்பு :-

இந்நூலில் வரும் 'சேயவன்புந்தி (48) என்ற பாடல் நவக் கிரகக் கோள்களால் வரும் கோளாறுகளைப் போக்கும் கோளறு பதிகமாகும். 'திருவாவினன்குடி பங்காளர்' (1) என்ற திருப்பாட்டு ஆறுபடை வீடுகளையும் ஓதுமாறு போதிக்கின்றது. முடிந்த 'செல்வந் திகழும்' (100) என்ற பாடலில் தெய்வயானையாரின் வாகனமாகிய மேகம் கருணை மழையால் வறுமையை மாற்றும்; வேல் எமபுரஞ் செல்லும்

தாய்ஞ்ஞலூர் அன்பால் தாவுகின்ற நல்லோர்சேர்
சேய்ஞ்ஞலூர்ச் செல்வாவுன் பாதநிழல் சேர்வேனே

வேதனையை விலக்கும்; வள்ளி மணாளன் மலரடி வழங்குவான் என்று மங்கலவுரை வழங்குகின்றது. திருயமகமாக அந்தாதித் தொடையில் எழுந்த புலவர்க்கே விருந்தாக அமைந்ததானாலும் பாராயணத்திற்கும் பயன்படும்.

"செல்வந் திகழும் நெஞ்சமே! அவன் தெய்வ மின்னார்
செல்வந்திகழு நமதின்மை தீர்க்கும் வெங்கூற்றுவர்க்குச்
செல்வந் திகழுந் திருக்கையில் வேல் தினைகாத்த செல்வி
செல்வந் திகழும் மணவாளன் நல்குந் திருவடியே. (100)

இனி, அருணையை குறிக்கும் கந்தாலங்காரத் துட்பொருளை அடுத்த இதழில் ஆராய்வம்.

மெய்யுணர்வு

(அ. ராமமூர்த்தி)

மாயை உண்மையை மறைக்கிறது. மனமயக்கத்தை உண்டு பண்ணுகிறது. பொய்ப்பொருளை மெய்ப் பொருள் என்று தவறாகக் கருதுமாறு செய்கிறது. மெய்யுணர்வுக்குத் தடையா யிருக்கிறது.

உண்மையில் தெளிவின்மையே மாயை அல்லது மயக்கம் என்று கூறத்தகும். அஞ்ஞானமே தெளிவின்மைக்குக் காரணம். ஞானம் மாயையால் மூடப்பட்டிருக்கிற நிலையில் அஞ்ஞானமென்ற பெயர் பெறுகிறது. மூடப்பட்ட பொருள் அகலும்போது தெளிந்த ஞானம் பிரகாசிக்கிறது.

மாயையின் ஸ்வரூபத்தில் ஒன்று சந்தேகம்: சந்தேக உணர்ச்சி மெய்யுணர்வுக்கு எதிரிடையானதாகும். சந்தேகம், அவநம்பிக்கை, ஆர்வமின்மை, அஞ்ஞானம், குழப்பம் முதலிய எல்லாவற்றின் மொத்தமான கோரஸ்வரூபமே மாயை!

ஆவன் அடியரிடம் என்றே வழிபார்க்கும்
தேவன் குடியாய் திருவருளை நல்காயோ

வாஸ்தவ ஸ்வரூபத்தை எதுவும் மறைக்க முடியாது. அழிக்க முடியாது. ஆயினும் மெய்யுணர்வுக்கும் மனிதனுக்கும் இடையே தலைகாட்டி, உண்மை ஞானத்திற்கும் அவனுக்கும் ஒரு பெரிய இடை வெளியை உண்டு பண்ண முடியும்.

உள்ளம் உண்மையால் தெளியும்போது இந்த இடை வெளி கிடையாது. உண்மை என்றும் எப்பொழுதும் எதற்கும் வசப்படுவதில்லை. ஆட்கொள்ளப் படுவதில்லை. தனக்குத் தானே சாட்சியாய் விளங்கிக் கொண்டிருப்பது.

வழிதவறும்போது—பிரச்னையின் தெளிவு காண முடியாதபொழுது—உண்மைக்கும் தனக்கும் இடையே ஒரு பெரிய இடை வெளியைக் காண நேரும்பொழுது—லட்சியம் நிர்ணயமாகாத போது மனிதன் மாயை வசப்பட்டிருக்கிறான் என்று கூறலாம்.

சந்தேக உணர்ச்சி நீங்கும் பொழுது உண்மைப் பொருள் புலப்பட ஆரம்பிக்கிறது. உண்மையின் தெளிவு 'ஞானம்' ஆகும்.

உண்மையை மட்டும் அஸ்திவாரமாகக் கொண்டது மெய்யுணர்வு ஆகும். புலன்களையோ பொருள்களையோ மட்டும் சார்ந்து நிற்கும் உணர்வு மாயை ஆகும். மெய்யுணர்வு எதற்கும் வசப்படாதது. ஆனால் எல்லாவற்றையும் தன் வயப்படுத்திக் கொள்வது. மெய்யுணர்வு அற்றவர்களுக்கு நிலையான பயன் இல்லை.

பொருள்களின் இயல்பை மட்டும் அறிவது அறிவு. அறிவின் இயல்பைத் தெளிவாக உணர்வது மெய்யறிவு. மெய்யறிவு உண்மை உணர்வாகும்போது அது மெய்யுணர்வு ஆகிறது.

மெய்யுணர்வு உண்மையையே அநுபவிக்கிறது. காரியமாகிற பிறவியை காரணமாகிய ஞானத்தோடு இணைக்கும்

கருவியலூர் காணார் களிப்பக்கண் காணும்
திருவியலூர் வள்ளல் திருவருநாள் என்றேயோ

ஒரு பால்மாக அமைகிறது. மெய்யுணர்வுடையோனுக்கு அடுத்த பிறவியே கிடையாதென்று திடமாகச் சொல்லலாம்.

பிறவிக்கு மூலகாரணம் அறியாமைதான். இன்பத்தின் கேவலநிலை பிறவியாக உருவெடுத்திருக்கிறது. லட்சியத்தோடு பிறவி ஏற்படவில்லை. ஆனால் பிறவிக்கு இலட்சியம் வேண்டும். அதுதான் ஞானம்.

அறிவு மெய்ப்பொருளைக் காணும்போது சிறக்கிறது. உணர்வு மெய்ப்பொருளோடு ஒன்றும்போது பிரகாசிக்கிறது. பிறவி மெய்ம்மையோடு இணையும்போது முக்தி கிடைக்கிறது.

மெய்ப்பொருளைப் பொய் மறைப்பதில்லை. ஆனால் பொய்ப்பொருள் மெய்ப் பொருளாகத் தோற்றப் படலாம். அதுதான் மாயை.

மாயை எப்பொழுதும் துன்பத்தையே தரக்கூடியது. ஒன்றை மற்றொன்றாகக் கருதுவதே துன்பம் தரக்கூடியதுதானே?

உலகம் மாயை என்று கூறுவோர் பலர். ஆனால் உண்மை அதுவல்ல. தெளிவற்ற நிலையில் எதுவும் மாயையென்றும், தெளிந்த நிலையில் எல்லாம் மெய்யே என்றும் கொள்வதே சிறந்ததாகும்.

மாயை என்பது பொருளிலே இல்லை. அதைப் பார்ப்போனுடைய மதிப்பீட்டிலேதான் உள்ளது. பழுதையைப் பாம்பென்று கருதுவது மாயை. பழுதையைப் பழுதையாகவே காண்பது (உண்மை நிலையில் அதை உணர்வது) ஞானம். அதேபோல் பாம்பைப் பழுதையாகப் பார்ப்பதும் மாயைதான்.

காட்சியிலே மாயை இல்லை. காண்போனுடைய மனத்திலேதான் உள்ளது.

அட்டையூர்போல் இகத்தில் அன்னே அழுந்தாமல்
கொட்டையூர் வாழ்சிவனே என்றென்னைக் கொள்வாயோ

ஸ்வரூபதரிசனம் (வாஸ்தவத்தை மட்டுமே காணுதல்) மாயையை அழிக்கிறது. மெய்யுணர்வுதான் ஸ்வரூப தரிசனத்திற்கு அஸ்திவாரம்.

மெய்யுணர்வுகளுக்குப் பல படிகள் கிடையாது. அதுவே எல்லாவற்றிற்கும் ஒரே சிகரமாகும். கால தேச வர்த்தமானத்தைக் கடந்ததுதான் மெய்யுணர்வு. அது தோன்றி கிரமமாக வளர்வதென்பது இல்லை. பூரண வளர்ச்சியோடு தான் அது தோன்றவே செய்கிறது.

இறைவனைப் பற்றிய அறிவுதான் மெய்யறிவு. அவனைப் பற்றிய ஞானமே மெய்ஞ்ஞானம். மெய்ஞ்ஞான சுகானுபவமே மெய்யுணர்வு.

உணர்வு வேறு, அறிவு வேறு என்ற நிலை மெய்யுணர்விலே கிடையாது. உணர்வும் அறிவும் ஒத்த நிலை தான் மெய்யுணர்வு. அது என்றும் புதுமையானது. நிரந்தரமானது.

மெய்யுணர்வு பொருளுக்குள்ளே ஊடுருவிப் பாய்ந்து உண்மையை மட்டுமே தேடுகிறது. பொருளின் தன்மை எத்தகையதா யிருந்தாலும், அங்கே மெய்யை மட்டுமே அதுகாண முடியும்.

மெய்யுணர்வுக்கு மேற்பட்ட உணர்வு நிலை வேறு ஏதும் இல்லை. அப்பரும் சுந்தரரும் அருள் மணி வாசகரும், அருணகிரிநாதரும் பெற்ற அவ்வுணர்வே மேலான மெய்யுணர்வு

மன்னம்பர் இன்னரென மாழ்கி மயங்காமல்
இன்னம்பர் என்னம்பர் என்றே இறைஞ்சுவனே

மதிப்புரை

அலங்காரம் :—உரையாசிரியர் கி.வா.ஜ. கிடைக்குமிடம் அமுத நிலையம், தேனாம்பேட்டை, சென்னை-18

அலங்கார நூற்கள் பல. அவைகளுள் ஒன்று கந்தர் அலங்காரம். நூறு பாடல்களை யுடைய அந்நூலைச் செய்தவர் அருணகிரி நாதர். அதற்குப் பலர் உரை கண்டுளர். இன்று கி.வா.ஜ அவர்கள் செய்த கந்தரலங்காரப் பிரசங்கம், அப்படியே அச்சேறி யுளது. ஊரெலாம் சுற்றி, இன்றைய உலகிற் காணப்படும் உதாரணங்களைக் காட்டி, தத்துவங்களை ஒப்புவமையுடன் பசுமரத்தாணிபோல் மக்கள் மனதில் பதியச் செய்யும் இவ்வுரை, பொன்போல் போற்றத் தக்கது. அலங்காரத்திற்கு அமைந்த உரையும், அலங்காரமாகவே அமைந்தது எனலாம். இறந்த காலப் பெருமக்கள் உணர்விற் பொங்கிய பொன்னுரை யெல்லாம் புத்தக வடிவு ஆகாமல், காற்றோடு கலந்து கரந்த நிலைமைகளை இன்று எண்ணினால் கண்ணீர் வருகிறது. அங்ஙனம் ஆகாதபடி, கி.வா.ஜவின் அலங்காரப் பிரசங்கத்தை எழுத்தெழுத்தாய் விடாது எழுதி உடனே பிரசுரிக்கும் அமுத நிலையத்தார்க்கு உலகம் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளது. இதுவரை இரு பகுதிகள் வெளிவந்திருக்கின்றன. முருகனடியவர் இவைகளைப் பெற்றுப் பயன் பெற வேண்டுகிறோம். ஒரு பகுதியின் விலை ரூ. 2—0—0

பதினெண் புராண வெளியீடு

வைதிக தர்மவர்த்தனி ஆசிரியர் ஸ்ரீவத்ஸ வே. சோமதேவ சர்மா அவர்கள், அறிவுக் களஞ்சியமான வியாசர் இயற்றிய 18 மகா புராணங்களையும், ஸ்ரீ ராமாயணம், பாகவதத்தையும் 6 புத்தகங்களாக சுருக்கமான முறையில் அச்சிடுகிறார்கள். முன்பணமாக ரூ. 15—0—0 உதவி, இத்தகைய சிறந்த தொண்டுக்கு எவரும் ஆதரவளித்து, வெளிவரும் நூற்களால் மக்கள் நலனடையச் செய்யவேண்டு மென்பது எங்கள் பணிவான வேண்டுகோள்.

ஆசிரியர்.

பணம் அனுப்பும் விலாசம் :—

குருகுலம், 2 ஸ்டேஷன் ரோடு, மேல மாம்பலம், சென்னை-17.

Great men are slow, very slow to believe the evil in others. They are the apostles who justify the ways of god to man. Every evil is explained away by the karmic reaction of the sufferer. Karmic reaction is inevitable. There are means by which even *prarabdha* can be avoided or modified. But the great sages see no evil anywhere. The past evil actions of men engender in due time the forces that create suffering, which is the true adjusting force for the violent disturbances of the peace and stability of mind followed by action by way of wrongful conduct in the past. To suffer, to serve are the two mighty forces for the restoration of peace and stability. To react in terms of retaliation is to still further remove from our horizon the prospects of spiritual realisation. Jesus on the Cross is an over-powering example of the suffering of the good for the redemption of wickedness. The third requisite for spiritual realisation is "*Dhaya*" - called "Bhootha daya". This, in one aspect, is 'universal love.' The great Tamil Saints have insisted that this love which is the concomitant of Bhakti is a primordial requisite. For, the Lord lives in every life. He serves Lord, who serves life. He lives who loves. He who hates another life is to that extent an asura. All the lives in the world and the world itself are a manifestation of God. Arunagiri sang.

நீதத்துவமாகி நேமத்துணையாகி
பூதத்தயவான போதைத்தருவாயே "

Thayumanavar, Vallalar, the great Alwars and Nayanmars all declare that this virtue is basic for realisation. This is nothing strange as these are embodied in the glorious Upanishads as the Tripod of Realisation,

Thiruppugal Mani

207

மெய்யெனப் பொய்யைச் சொல்லி மேதினி தன்னில் வெற்றுப்
பையெனத் திரிந்தேன் இந்தப் பாவியை ஆள்வ தென்றோ?
உய்யவே றுண்டோ நின்றன் உபயநற் சரணம் அல்லாஸ்!
எய்திட வழியே(து)? ஒற்றி என்னையா ளுடைய கோவே!

No.1506
அசோகா
MILD SCENTED
ASOKA
நெ.1506

Coffee

Ours for Quality

RAW, ROAST OR GROUND

GANESH & CO., (MADRAS), LTD. MADRAS

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்

சுவர்ண மாளிகை

A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.

தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்

124, தெற்காவணி மூலவீதி - மதுரை

Tel:—"FAITH" Estd:—1924. Phone:—113

அரிய தெய்வ அருள் நூல்கள்

குகஸ்ரீ. பு. பா. ரசபதி அவர்களின் அருமையான
விரிவுரையுடன்

ஸ்ரீ அருணகிரிநாதர் கந்தர் அனுபூதி	1	0	0
,, 6 திருவகுப்புகள்	1	8	0
ஸ்ரீ பகழிக் கூத்தர் திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்	2	0	0
ஸ்ரீ குமரகுருபரர் அருளிய கந்தர் கலிவெண்பா	2	0	0
ஸ்ரீ சேரமான் பெருமாள் திருக்கயிலாய ஞானவுலா	2	0	0
ஸ்ரீ ஔவையார் அருளிய விநாயகர் அகவல்	1	8	0
திருவெம்பாவை திருப்பாவை திருப்பள்ளி யெழுச்சிகள்	0	6	0
திருப்புகழ் மாலை (250 பாடல்கள் மட்டும்)	0	12	0
கந்தக் கதம்பம் (பாடல்கள்) பல பிள்ளைத் தமிழுடன்	1	0	0
தேவி தாஸர்கள் (அச்சில்)			
கணபதி பக்தர்கள் ,,			
முருகனடியார் ,,			

அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1

Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Road, Madras—18
Edited & Published by S. Muthuswami, 54, Bundar St. Madras-1